Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-05 | 20-12-2004 | திங்கட்கிழமை | ஓசை -306




# ஜே.வி.பியை நரகத்துக்கு அனுப்பிவிட்டு புலிகளுடன் பேசுக;

# தவறின் புலிகளின் அடுத்த நகர்வு மகிழ்ச்சியானதாக இராது!

## புலிகளை எவரும் குறைகூறமாட்டார்கள் எனவும் முன்னாள் விமானப்படைத்தளபதி அரசுக்கு தெரிவிப்பு

**ஜே.வி.பி யினரை நரகத்துக்குப் போங்கள் என்று சொல்லிவிட்டு பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். இல்லையெனில் புலிகள் இருவாரங்களில் எடுக்கக் கூடிய நகர்வு எமக்கு மகிழ்ச்சியானதாக இராது. அதற்காக புலிகளை எவரும் குற்றம் சொல்லவும் மாட்டார்கள். இவ்வாறு முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரிகுணதிலக கூறியுள்ளார்.**

ஏ.எவ்.பி செய்தி நிறுவனத்துக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்போது பந்து அரசாங்கத் தரப்பின் பக்கத்திலேயே கிடக்கிறது. விரைவில் சண்டை தொடங்கினால் எவரும் புலிகள் மீது குற்றம் சொல்ல மாட்டார்கள் எமக்கு உதவவும் எவரும் முன் வரமாட்டார்கள் என்பதை அரசாங்கம் உணரவேண்டும்.

சமாதான நடவடிக்கையை வலுவாக ஆதரித்த அமெரிக்கா ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகள் இதிலிருந்து தங்களை விலத்திக் கொண்டு அரசாங்கத்தின் மீது பழியைப் போடுவதற்கு தயாராவது போல் தெரிகின்றது. அதனால்தான் நான் சொல்கிறேன் நரகத்துக்குப் போங்கள் என்று ஜே.வி.பியிடம் சொல்லிவிட்டு சனாதிபதி பேச்சை உடனே ஆரம்பிக்க வேண்டும் இல்லை யெனில் புலிகள் தங்கள் அடுத்த நகர்வை எடுப்பதற்கு இன்னும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மேல்மாகாணத்தின் பல பகுதிகளில் பரவலாக சில நிமிடங்கள் புவி அதிர்வு

இலங்கையின் மேல் மாகாணத்தில் நேற்று பரவலாக சில நிமிடங்கள் புவி அதிர்வு ஏற்பட்டுள்ளது. எனினும் பாதிப்புகள் குறித்து தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. நித்தம்புவ, நீர்கொழும்பு, மினுவாங்கொட, ஜாஎல, கம்பஹா மாலபே மற்றும் வெள்ளவத்தை ஆகிய இடங்களிலேயே இந்த புவிஅதிர்வு உணரப்பட்டுள்ளது. இதேவேளை புவி அதிர்வின் ரிக்டர் அளவை கணிப்பிடுவதற்கான மையம் நேற்று விடுமுறை காரண மாக மூடப்பட்டிருந்தால் அதனை தெரிந்துக்கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் இது தொடர்பாக பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயனி பண்டாரவை தொடர்புகொண்ட போது அவர் கருத்துத் தெரிவிக்கையில்; இலங்கையின் நிலப்பரப்புக்குள் புவிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் றோமன் கத்தோலிக்க தேவாலயத்துக்கு தீ வைப்பு

இலங்கையில் இந்த வருடத்தில் இரண்டாவது தடவையாக றோமன் கத்தோலிக்க தேவாலயம் ஒன்று தீ மூட்டப்பட்டது தலைநகர் கொழும்பு அருகே ஹோமாகம என்னும் இடத்தில் இருந்த இந்தத் தேவாலயத்தில் மதச் சின்னங்கள் மற்றும் தளபாடங்கள் அனைத்தும் எரிக்கப் பட்டதாக பொலிசார் கூறியுள்ளனர். இந்த தாக்குதல் இடம்பெற்ற போது தேவாலயத்தில் எவரும் இருக்கவில்லை. நேற்று அதிகாலை தீயிடப்பட்ட இந்த ஹோமாகம பொலிஸ்தேவாலயம் நிலையத்துக்கு சுமார் 200 மீற்றர் தொலைவில் உள்ளது.

இந்த சம்பவத்துக்கு பொறுப்பானவர்கள் அடையாளம் காணப்



படவில்லை எரிவாயு கொள்கலன்கள் மற்றும் டயர்கள் ஆகியவற்றுடன் வந்த 6 பேர்கொண்ட குழுவொன்று இந்தத் தாக்குதலை நடத்தியதாக நேரில் கண்டவர்கள் கூறினர். (32)

## உள்நாட்டில் அமைதியைப் பேணமுடியாத படைகள் வெளிநாட்டு அமைதிப்பணிக்கு போகவேண்டுமா?

### சிறிலங்கா ராணுவத்தளபதி சாந்தகொட்டேகொட கேள்வி

20வருடங்களாகப் போராடியும் உள்நாட்டில் அமைதியைப் பேண முடியாதவர்களாக உள்ள எமது படைகள் வெளிநாட்டில் அமைதியை நிலைநாட்டும் பணிக் குப் போகத்தான் வேண்டுமா என சிறிலங்கா இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சாந்தகொட்டேகொட கேள்வி எழுப்பியுள்ளார்.

வெளிநாட்டு அமைதிப் படைக்குச் சிறிலங்காப் படையினர் அனுப்பப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கருத்துக் கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் யுத்த பீதி ஏற்பட்டிருக்கிறது. புலிகள் தம்மை ஆயுத வளத்தாலும், ஆளணியாலும் பாரியளவில் வலுப்படுத்தியுள்ளார்கள். எந்நேரம் யுத்தம் வெடித்தாலும் அதனை எதிர்கொள்ளும் வகையில் அவர்கள் தயார் நிலையில் உள்ளார்கள். ஆனால் அரசோ பட்டாலியன் பட்டாலியனாக இராணுவத்தினரை அமைதிப் பணிக்கென வெளிநாட்டுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறது.

20 வருடங்களாகப் போராடியும் உள்நாட்டில் அமைதியைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சட்டம், அமைதியை பாதுகாக்கும் நிறுவனங்கள் முறையாக இயங்கவில்லை

### - மீண்டும் சனாதிபதி சந்திரிகா குற்றச் சாட்டு

(கண்டி)

இந்நாட்டில் சட்டத்தையும், அமைதியையும் பாதுகாப்பதற்கான நிறுவனங்கள் முறையாக இயங்காமையால் நாட்டை முன்னேற்ற தடையாக உள்ளதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் புதிய நீதிமன்றத் தொகுதியை நேற்றைய தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

நீதிமன்றங்கள், பொலிஸ் என்பன கூட்டணிகளின் பாதுகாப்புக்கு முக்கிய நிறுவனங்கள் எனவும் சுட்டிக்காட்டிய சனாதிபதி மேலும் அங்கு உரையாற்றுகையில்;

சனாதிபதி என்ற ரீதியில் இது பற்றி நான் தெரிவித்த கருத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் விடுதலை அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திலேயே உள்ளது

### - திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம்

மக்களின் விடுதலை அவர்களின் வாழ்க்கையின் முன்னேற்றத்தில் தான் தங்கியுள்ளது என திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்துள்ளார்.

நேற்று மூதூர் கிழக்கு-கட்டைபறிச்சான் விபுலானந்த வித்தியாலயத்தில் வட-கிழக்கு மாகாண பிரதம செயலாளர், மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் மாகாணத் திணைக்களங்களின் தலைவர்களுடன் திருமலை மாவட்ட அபிவிருத்தி பற்றி கலந்துரையாடிய வேளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் அரசியல்தீர்வு பேச்சுவார்த்தை கேள்விக்குறியாக அமைந

(12ஆம் பக்கம் பார்க்க)

### – காணாமல் போனோர் குறித்து அறிய –

## சனாதிபதியுடன் பேச்சு நடத்த யாழ். அன்னையர்முன்னணி முடிவு

1996/97ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன தமிழ் இளைஞர், யுவதிகளினது நிலையினை அறிந்து கொள்ள ஏதுவாக, சனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுநடாத்த யாழ்.மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்துள்ளது. இதற்கேதுவாக தமக்கு நேரமொன்றை ஒதுக்கித் தருமாறு கோரி மகஜரொன்றை சனாதிபதிக்கு நேற்று அது அனுப்பிவைத்துள்ளது.

நேற்று யாழ்.கோட்டை முனியப்பர் ஆலயமுன்றலில் இடம்பெற்ற அன்னையர் முன்னணியின் கலந்துரையாடலிலே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அம் மகஜரில் "சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகிய உங்களது ஆட்சிக்காலப் பகுதியிலேயே யாழ். மாவட்டத் தினில் பெருமளவிலான தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளனர். இவர்களது நிலை தொடர்பாக நடந்த நேரடிச சந்திப்பில் செம்மணிப் பகுதியில் படையினரால் கொலை செய்யப்பட்ட 18 பேர் தவிர்ந்த ஏனையோர் உயிருடன் இருப்பதாக தாங்கள் உறுதியளித்திருந்தீர்கள். அதே போன்று முன்னாள் யாழ்.மாவட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)



தமிழர் தாயகப்பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனேடியத் தமிழ் வானொலியான சி.ரி.ஆர் மூலம் திரட்டப்பட்ட நிதி வானொலிக் கலைஞர்களால் கனேடிய தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தலைவரிடம் கையளிக்கப்படுகிறது.

(படம் - எழிலன்)

## வரிவிளம்பரம்

### பெற்றுக்கொள்ளவும்

தனித்தமிழ் டயறி, தினத்தாள் கலண்டர், மாதாந்த பஞ்சாங்கக் கலண்டர் மொத்தமாகவும், (விசேட கழிவு) சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உயர்ச்சி பொத்தகசாலை துணுக்காய்சாலை மல்லாவி. (4142)

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

அமுதன் கல்வி நிலையம், சயன்ஸ் கோல் கல்விநிலையம் ஆகிய இரு கல்வி நிலையங்களில் 18.12.2004 அன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது. ஆண்டு 06தொடக்கம் 11ஆம் ஆண்டு வரையான புதிய வகுப்புக்கள் நடைபெறவுள்ளது என மாணவர்களுக்கு அறியத் தருகின்றனர். நிர்வாகி. (5072)

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு இல.4 சிறி 4611 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி எஸ்.அருள்நாதன், இல 117, நாதன்ஸ் ,குட்செட் செட்றோட் வவுனியா. (5410)

### தவறிவிட்டது

17.12.2004 அன்று ஒட்டுசுட்டானுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையில இரண்டு நிரந்தர பயண அனுமதி அட்டையும் தேசிய அடையாள அட்டையும் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (5421)

### ஜோண்கல்வி நிலையம் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

முல்லைவீதி, புதுக்குடியிருப்பு 2005ஆம் ஆண்டுக்கான தரம் 03 தொடக்கம் தரம்-11 வரையான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. காலம் 20.12.2004 திங்கள் பி.ப.3.00 மணி நிர்வாகி.(5058)

## - கிளி மருத்துவமனையில் -

# நோயாளர் பொழுதுபோக்கு மையத்திறப்பும் நூல்வெளியீடு, ஊழியர்கௌரவிப்பு நிகழ்வும்


(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் (சோஆ) நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பெற்ற "நோயாளர் பொழுதுபோக்குமைய" திறப்புவிழாவும், "நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்கு உள்ளான நோயாளர்களுக்கான அறிவுரைகள்" மருத்துவ நூல்வெளியீடு மற்றும் மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கௌரவிப்பு ஒளிவிழா நிகழ்வுகள் என்பன நேற்று கிளி.மாவட்ட வைத்திய சாலையில் நடைபெற்றது.

நேற்று மாலை 7.00 மணிக்கு கிளிநொச்சி மருத்துவ சங்கத்தலைவர் வைத்தியகலாநிதி பி.பிறைட்டன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கலவிளக்கேற்றலினைத் தொடர்ந்து நோயாளர் பொழுதுபோக்கு மையத்தினை (சோஆ) ZoA நிறுவன கிளி. மாவட்ட திட்டமுகாமையாளரின் துணைவியார் கரோல்வேர்ஆன் சம்பிராதய பூர்வமாக் நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார். மின்ஆழியை அழுத்தி மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் றேகா பொழுதுபோக்கு மையத்திற்கான மின்சார விநியோகத்தினை ஆரம்பித்து வைத்தார். வரவேற்புரையினை வைத்தியகலாநிதி டேமியன் நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புரைகளை வைத்தியநிபுணர் கெங்காதரன், வைத்தியகலாநிதி நூலாசிரியர் பேரானந்தராசா டாக்டர் சிதம்பரநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஆகியோர் நிகழ்த்தினர். தொர்டர்ந்து மருத்துவ நூல்வெளியீட்டு நிகழ்வு இடம் பெற்றது. "நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்கு உள்ளான நோயாளர்களுக்கான அறிவுரைகள்" மருத்துவ நூலினை மருத்துவப்பிரிவினைச் சேர்ந்த மனோஜ் வெளியிட்டு வைக்க, முதற்பிரதியினை வைத்திய நிபுணர் பெஞ்சமின் பெற்றுக்கொண்டார். நூல்வெளியீட்டுரையினை வைத்தியகலாநிதி சுதாகரன் நிகழ்த்தினார். அடுத்து வைத்திய சாலை ஊத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கௌரவிப்பு இடம்பெற்றது. தீ.சுவர்ணமயூரனின் இன்னிசை விருந்து நிகழ்வுடன் தொடர்ந்து ஒளிவிழா கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. நிகழ்வு ஒழுங்குகளை வைத்தியகலாநிதி யூடிரமேஸ் குமார் மேற் கொண்டார்.

மேற்படி நிகழ்வில் வைத்திய கலாநிதிகள், அரச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பங்குத் தந்தைமார், வைத்தியசாலை ஊழியர்கள், பொது மக்கள் பெருமளவில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)





நோயாளர் பொழுதுபோக்கு மையம்

# "வரலாறு தந்த வல்லமை" ஒலிப்பேழை அறிமுகவிழா

(நல்லூர்)

2ஆம் லெப்ரினன்ட் மாலதி படையணியின் உருவாக்கத்தில் இசைவாணன கண்ணனின் இசையில் உருவான "வரலாறு தந்த வல்லமை" பாடல் ஒலிப்பேழை அறிமுக விழா நேற்று முன்தினம் நல்லூர் நாவலர் கலாச்சார மண்டபத்தில் எழுத்தாளர் திருமதி.சிவகுமார் ஆதிலட்சுமி தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வின் பொதுச்சுடரினை மாவீரர் கப்டன் அமுதினியின் தந்தையார் சிவசுப்பிரமணியம் ஏற்றிவைத்தார். அறிமுக உரையை மகளிர் அரசியல்துறையைச் சேர்ந்த தமிழவள் நிகழ்த்தினார்.

ஒலிப்பேழையை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி வெளியிட்டு வைக்க, மாவீரர் கப்டன் அமுதினியின் தயார் திருமதி. சிவசுப்பிரமணியம் ஞானேஸ்வரி பெற்றுக்கொண்டார். கலைஞர்களை 2 ஆம் லெப்ரினன்ட் மாலதி படையணி தளபதி தமிழ்ச்செல்வி கௌரவித்தார். மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சர்வதேச தமிழீழ மாணவர் அமைப்பைச் சேர்ந்த கிருஷ்ணா ஆகியோரும் உரையாற்றினார்கள்.(41)

# துணுக்காய்ப் பிரதேசத்தில் சமகாலஅரசியல் கருத்தரங்கு

துணுக்காய் பிரதேசத்தில் அனிஞ்சியன்குளம் கிராம சேவகர் பிரிவில் சமகால அரசியல் நிலவரம் தொடப்பான கருத்தரங்கும், கிராம அபிவிருத்திச்சங்க கூட்டமும்,கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கந்தையா தலைமையில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் அனிஞ்சியன்குளம் அ.த.க பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்ற இந் நிகழ்வில் சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கருத்துரைகளை முல்லை மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன், பாண்டியன் குளம் துணுக்காய் தமிழர் புனர்வாழ்வுக் கழ வலயப் பணிப்பாளர் மூர்த்தி, துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் புனிதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். இந் நிகழ்வில் துணுக்காய் பிரதேச உதவி அரச அதிபர் அவர்களும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். அத்துடன் 2005ஆம் ஆண்டிற்கான புதிய நடப்பாண்டு நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இதில் அனிஞ்சியன்குளம் கிராமத்தைச் சேர்ந்த 300இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். இதேவேளை துணுக்காய் பிரதேச சமனங்குளம் கிராமத்திலும் சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கருத்துரை நேற்று 12.00 மணிக்கு இடம் பெற்றது. இந் நிகழ்வு பாண்டியன்குளம் துணுக்காய் புனர்வாழ்வுக்கழக வலயப் பணிப்பாளர் மூர்த்தி தலைமையில் இடம் பெற்றது. இதில திட்டம் சம்பந்தமான கருத்துரையினை துணுக்காய் பிரதேச செயலா நந்தகுமார் நிகழ்த்தினார். சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கருத்துரையினை துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் புனிதன் நிகழ்த்தினார். மற்றும் கருத்துரைகளை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரவிகரன் நிகழ்த்தினார்(24)

### புத்தகக்கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தால் அனைவருக்கும் பயன்தரக்கூடிய விதத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்ற புத்தகக் கண்காட்சியும் விற்பனையும நூலகங்கள், பிரதேச சபைகளின் பயன்கருதி டிசம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. சிற்பம், வைத்தியம் உள்ளிட்ட பல புதிய வெளியீடுகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021-2222573

(சீ-11038)

## ‘சங்கநாதம்’ சிறப்பிதழ் யாழ்.இல் வெளியீட்டு விழா

"சங்கநாதம்" சிறப்பிதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துசிறப்பிக்குமாறு யாழ்.பல்கலைக்கழக ஊழியர்சங்கம் கோரியுள்ளது. (33)

## பரிசில் வழங்கல்

17.12.2004 குமாரபுரம் ஸ்ரீசித்திர வேலாயுதர் ஆலய கும்பாபிஷேக நிதிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச்சீட்டு முடிவுகள்.

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு சீட்டு இல | 5870 | 5 ஆறுதல் பரிசு சீட்டு இல | 1745 |
| 2ஆம் பரிசு சீட்டு இல | 377 | 6 " " | 5028 |
| 3ஆம் பரிசு சீட்டு இல | 10087 | 7 " " | 1909 |
| 1 ஆறுதல் பரிசு சீட்டு இல | 869 | 8 " " | 1180 |
| 2 " " | 1585 | 9 " " | 5043 |
| 3 " " | 7896 | 10 " " | 1283 |
| 4 " " | 4026 | | |

பரிசு பெற்றவர்கள் எதிர்வரும் 25.12.2004 திகதி தொடக்கம் 25.02.2005இற்கு முதல் ஆலயத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளவும் அதன் பின் பரிசில்கள் வழங்கப்படமாட்டாது.

ஆலய பரிபாலன சபையினர்,
குமாரபுரம்,
முள்ளியவளை.

(5073)

# சாவு அறிவித்தல்

## வைத்திலிங்கம் கனகசுந்தரம் (அருணகிரி)

8ஆம் வட்டாரம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கனகசுந்தரம் 18.12.2004 (சனிக்கிழமை) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் செல்லம்மாவின் அன்புமகனும்,காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு மனோன்மணியின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், அசோக்குமார், உதயகுமார், கோமளாதேவி, சிவகுமார் (சேரன்வாணிபம்), யோககுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரா, கலைமதி, தவராசா, வசந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், இரத்தினம், காலஞ்சென்றவர்களான இராசமணி, பாலசுந்தரம், ஆகியோரின் சகோதரனும் ஆவார். இராசேஸ்வரி, காலஞ்சென்ற வரதராசா, கோணேஸ்வரி, லிங்கநாதன், தளையசிங்கம், சத்தியபாமா ஆகியோரின் மைத்துனரும், நியோத், சுயோந்த், கிசோக், மதுஷா, விதுஷா, தனுஸ், சஜித், அஜித், சாருசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21.12.2004 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்குஅன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல118,
நாகதம்பிரான் கோவில்வீதி,
உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

தகவல்:-
க.பரமேஸ்வரி (மனைவி)

(5422)

# பாக்.இராணுவத் தலைமைத் தளபதி பதவியிலிருந்து விலகுவதான முடிவை முஷாரப் கைவிட்டார்

**இவ்வாண்டு இறுதியில் இராணுவத்தலைமைத் தளபதி பதவியிலிருந்து நீங்கிக் கொள்வது என்ற முன்னைய அறிவிப்பை பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் கைவிட்டுள்ளார். இதற்கான காரணத்தைப் பின்னர் அறிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.இதனை எதிர்த்து எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.**



பாகிஸ்தான் இராணுவத் தலைமைத் தளபதியாக டிபபேன் என் பவரை அந்நாட்டு அதிபர் பெர்வெஸ் முஷாரப அறிவித்திருந்ததுடன் இந்த ஆண்டு கடைசியில் இராணுவப்பதவியிலிருந்து விலகப் போவதாக அதிபர் முஷாரப் ஏற்கனவே அறிவித்திருந்தார். ஆனால் இராணுவ பதவியை கைவிடப் போவதில்லை என்று தற்போது அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் இந்திமொழி கே.டி. என். தொலைக்காட்சியில் முஷாரப் கடந்த வெள்ளி உரையாற்றும் போது மேற்கண்டவாறு அறிவிப்பை அவர் வெளியிட்டார். அந்த தொலைகாட்சி பேட்டியை பாகிஸ்தான் நாளேடுகள் முக்கிய செய்தியாக வெளியிட்டன. "நாம் கடந்த காலத்தில் எங்கே இருந்தோம்? தற்போது எங்கே இருக்கிறோம்? இனி எதிர்காலத்தில் எங்கே இருக்கப்போகிறோம்?" என்று முஷாரப் அந்தத்தொலைக் காட்சிப் பேட்டியில் கேள்வி எழுப்பிய அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை, தேசிய ஒருமைப்பாடு ஆகிய நலன்களைக் கருத்திற் கொண்டு இராணுவத் தளபதி பதவியைகைவிடப் போவதில்லை என்று முடிவு செய்திருப்பதாக தெரிவித்தார்.

இதேவேளை தனது இராணுவத்தலைமைத் தளபதி பதவியை டிசம்பர் 31 ஆம் திகதி கைவிடப் போவதாக முஷாரப் ஏற்கனவே சொல்லியிருந்தார். இந்நிலையில் தாம் அதைச் செய்யப் போவதில்லை என்று அவர் அறிவித்திருப்பது பாகிஸ்தான் அரசிய லில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முஷாரப் தனது வாக்குறுதியை காப்பாற்ற வேண்டும் என்று பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. குறிப்பாக இஸ்லாமிய கட்சிகள் இவ்வாறு வலியுறுத்திவருகின்றன. பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் சில அரசியல் சட்ட திருத்தங்களைச் செய்ய இஸ்லாமிய கட்சிகளின் ஆதரவை முஷாரப் கோரியிருந்தார். அந்தக் கட்சிகள் ஆதரவு அளித்தால் இராணுவப் பதவியிலிருந்து தாம் விலகுவதாகவும் அவர் வாக்குறுதி அளித்திருந்தார். அந்த வாக்குறுதியை முஷாரப் காற்றில் பறக்க விட்டதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தை தவிர்ப்பதற்கான அதிகாரத்தை அந்த அரசியல் சட்ட திருத்தங்கள் பாகிஸ்தான் அதிபருக்கு வழங்குவது குறிப்பிடத்தக்கது. 1999 இல் நடந்த இராணுவக் கட்சி கவிழ்ப்பின் மூலம் அதிபர் பதவியை முஷாரப் கைப்பற்றினார். இராணுவத் தலை மைத் தளபதி பதவியையும் தானே அவர் தக்க வைத்துக் கொண்டார்.

பாகிஸ்தான் சனாதிபதி இராணுவ தலைமை அதிகாரியாக தொடர்வது குறித்த அறிவிப்புக்கு எதிராக ராவல்பிண்டியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.



### உப சனாதிபதி வெற்றி பெற்றார்

இந்தோனேஷியாவின் ஜெல்பா கட்சியின் தலைமைப் பதவியை அந்நாட்டு உபசனாதிபதி வென்றெடுத்துள்ளார். தற்போதைய தலைவரை தோற்கடித்து வெற்றி பெற்றதன் மூலம் தற்போது எதிர்க் கட்சியாக செயற்படும் ஜெல்பர் கட்சி சனாதிபதி யுதோயோனோவுக்கு ஆதரவு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மலேசியாவில் சட்டவிரோத குடியேறிகள் வெளியேற விதிக்கப்பட்ட காலக்கெடு முடிகிறது

(கோலாலம்பூர்)

மலேசியாவில் சட்டவிரோதமாகத் தங்கியிருப்போர் தண்டனையில்லாமல் தங்கள் நாடுகளுக்குத் திரும்ப மலேசிய அரசு கொடுத்த அவகாசம் இம்மாத இறுதியுடன் முடிகிறது. அதற்குள் மொத்தம் 2 இலட்சம் பேர் வெளியேறுவார்கள் என்று எதிர்பார்ப்பதாக மலேசிய குடியேற்றத் துறை உயரதிகாரி இஷாக் மொகமது தெரிவித்தார்.

இத்திட்டம் ஒகஸ்ட் மாதம் தொடங்கியது. சட்டவிரோதமாக மலேசியாவில் தங்கியுள்ளவர்கள் மார்கழி 31 ஆம் திகதிக்குள் வெளியேறினால் தண்டனையிலிருந்து தப்பிக்கலாம் என்று 'மலேசிய அரசு அறிவித்தது. அதையடுத்து இதுவரை ஒரு லட்சத்து 42 ஆயிரம் பேர் தங்கள் நாடுகளுக்குத் திரும்பியுள்ளனர். இதில் ஒரு இலட்சத்து 22 ஆயிரம் பேர் இந்தோனேஷியாவைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் இந்தியா, பிலிப்பைன்ஸ், வங்க தேசம், சீனாவைச் சேர்ந்தவர்கள்.

மார்கழி 31 ஆம் திகதிக்குப் பிறகும் சட்ட விரோதமாகத் தங்கியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் 5 ஆண்டுகள் சிறை, கடும் அபராதம் மற்றும் சவுக்கடி ஆகிய தண்டனைகள் விதிக்கப்பட்டு பின்னர் சொந்த நாட்டுக்கு அனுப்பப்படுவார்கள் எனக் குடியேற்றத் துறை அதிகாரி கூறியுள்ளார்.

## காஸா பகுதி சுரங்கத்தின் இடிபாட்டுக்குள் சிக்கியோர் மீட்பு

பலஸ்தீனியர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள காஸா - எகிப்து எல்லை பகுதியில் இருக்கும் ரகசிய சுரங்கப்பாதை திடீரென இடிந்து விழுந்ததில் அதனுள் சிக்கிக் கொண்ட ஆறு பேரும் மீட்கப்பட்டனர். 12 மணி நேரத்தின் பின் இவர்கள் மீட்கப்பட்டனர்.

கடத்தல்காரர்களே இந்த சுரங்கப்பாதையை ரகசியமாக பயன்படுத்தி வந்தார்கள். தற்போது உயிர் தப்பியுள்ள 6 பேரும் விலை உயர்ந்த சிகரெட்டுக்களை கடத்திச் செல்ல முயன்றபோது தான் மாட்டிக் கொண்டதாக தெரிய வருகிறது.ஆனால் இது பற்றி அதிகாரிகள் கருத்துக் கூற மறுத்து விட்டனர்.

## மட்ரிட் குண்டு வெடிப்பு தொடர்பில் மேலும் நான்கு பேர் கைது

(மட்ரிட்)

ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தொடர்பில் மொராக்கோ நாட்டைச் சேர்ந்த நான்கு பேரை ஸ்பெயின் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இது குறித்து ஸ்பெயின் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மட்ரிட் நகரில் மார்ச் மாதம் 11ஆம் திகதி பயணிகள் ரயிலில் குண்டு வெடித்தது. இதில் 191 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு முன் மொராக்கோ நாட்டில் 2003ஆம் ஆண்டு சாகாபிளாங்கா என்ற கடையில் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது. இந்த இரண்டு சம்பவங்களிலும், மொராக்கோ முஸ்லிம் தீவிரவாதி அமைப்புக்குத் தொடர்பு இருப்பது தெரிய வந்தது.

இதனையடுத்து, ஸ்பெயின் பொலிசார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். மொராக்கோ நாட்டிற்கு அருகே ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தமான லான்சரோட்டி என்ற தீவில் பதுங்கியிருந்த நான்கு பேரை பொலிசார் கடந்த வெள்ளி கைது செய்தனர். இவர்கள் அனைவரும் மொராக்கோ முஸ்லிம் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் மட்ரிட் ரயில் குண்டு வெடிப்பில் இவர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஈராக்கில் பொதுத்தேர்தல் பணியாளர்கள் மூவர் பாக்தாத்தில் கொல்லப்பட்ட நிலையில் அங்கு கட்டப்பட்டிருக்கும் "நாம் உங்கள் புத்திரர்கள்! சகோதரர்கள்!! உங்களின் வாக்குகள் விடுதலைக்கு!" என்ற பதாகையை நோக்கும் முதியவர் ஒருவர்.

## வீடுகளில் நுளம்பு பெருகும் சூழல் காணப்படின் அபராதம் விதிக்க சிங்கப்பூர் அரசு திட்டம்

டெங்குக் காய்ச்சலைத் தடுக்க சிங்கப்பூர் அரசு கடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. வீட்டில் நுளம்பு உற்பத்தியாக வாய்ப்பளிப்போருக்கு அபராதம் விதிக்கப்படும் என்று கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிங்கப்பூரில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது. அதனால் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே செல்கிறது. சிங்கப்பூரின் மக்கள் தொகை 40 இலட்சம் ஆகும். ஆனால் டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 8597 இற்கும் அதிகமாகியுள்ளது.

இந்த ஆண்டில் மூன்று பேர் டெங்குக்காய்ச்சலுக்குப் பலியாகியுள்ளனர். இதனால் சிங்கப்பூர் அரசு டெங்குக் காய்ச்சல் பரவுவதற்கான காரணங்களைக் கண்டறிந்துள்ளது. அவற்றில் வீடுகளில் இருந்துதான் நுளம்புகள் அதிகம் உற்பத்தியாகின்றன என்பது தெரிய வந்தது. வீடுகளில் வைக்கப்பட்டுள்ள பூந்தொட்டிகள், கூரைகள், சாக்கடைகளில் தேங்கும் நீரில் நுளம்பு உற்பத்தி அதிகரித்துள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டது. இதை அடுத்து வீடுகளில் நுளம்பு வளரும் சூழலை ஏற்படுத்துவோருக்கு அபராதம் விதிக்க சிங்கப்பூர் அரசு முடிவெடுத்துள்ளது.

வீடுகளில் தண்ணீர் தேங்குவதைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். வீடுகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். மீறினால் அபராதம் நிச்சயம் விதிக்கப்படும் என்று அரசு எச்சரித்துள்ளது. முதல முறை குற்றம் புரிபவர்களுக்கு 200 சிங்கப்பூர் டொலர் (12000 ரூபா) அளவிலான அபராதம் விதிக்கப்படும். அதே தவறை மீண்டும் செய்தால் அபராதம் இரட்டிப்பாகும். இந்த நடைமுறை வரும் பெப்ரவரி மாதத்தில் இருந்து அமு லுக்கு வருகிறது.

இத்தகவலை சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் "இஸ் டெர்ய்ட் ரைம்ஸ்" பத்திரிகை வெளியிட்டுள்ளது. சிங்கப்பூரின் அண்டை நாடுகளான மலேசியா இந்தோனேசியாவிலும், டெங்குக் காய்ச்சல் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



காஸா முனையில் கான் யுனிஸ் அகதிமுகாமை விட்டு இஸ்ரேலிய இராணுவம் வெளியேறிய பின்னர் தாக்குதலில் சேதமடைந்த தமது வீடுகளை இனம் காண முயற்சிக்கும் பலஸ்தீன மக்கள்.

## இந்தோனேசியா மீது அல்—ஹைதா தீவிரவாதிகளின் தாக்குதல் குறித்து அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை

இந்தோனேசியா மீது கிறிஸ்மஸ், புத்தாண்டு விடுமுறைக்காலத்தில் அல்-ஹைதா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும். எனவே இந்தோனேசியாவில் உள்ள அமெரிக்கர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது. இதேபோன்று எச்சரிக்கையை அமெரிக்கர்கள் அதிகமாக வசிக்கும் இதர நாடுகளுக்கும் அமெரிக்க வெளியுறவுத் துறை விடுத்துள்ளது. பில்லேடனில் அல்-ஹைதா தீவிரவாதிகள் எந்த நேரத்திலும், அமெரிக்க மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் மீது தாக்குதல் நடத்தலாம் என்பதால் அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் பின்லேடனின் குறி இப்போது இந்தோ னேசியா மீது திரும்பியிருக்கிறது. கிறிஸ்மஸ் பண்டிகையை ஒட்டி இந்தோனேசியாவில் கிறிஸ்தவர்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்த பின்லேடனின் அல்-ஹைதா தீவிரவாதிகளும் அந்த இயக்கத்துடன் தொடர்புள்ள ஜமாஇஸ்லாமிய இயக்கமும் திட்டமிட்டிருக்கிறது என அமெரிக்கா ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தது.

# வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளைப் புனரமைக்க நிதியில்லை!

## -கிளி.வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர் தகவல்

(அலுவலக செய்தியாளர்)

**அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வீதிகளைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமானது. மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடு கிடைப்பதற்கான அறிகுறிகள் இதுவரை காணப்படவில்லை.**

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர் வே. சிவே சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இம்மாவட்டத்தின் C,D தர வீதிகள் அனைத்தும் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக சேதமடைந்து போக்குவரத்திற்குப் பெரும் இடையூறாக அமைந்துள்ளன. அனைத்து வீதிகளிலும் பல இடங்களில் வெள்ளம் இரண்டு அடி முதல் ஐந்து அடி வரை வீதிக்கு மேலாகப் பாய்ந்து வீதிகளை அரித்துச் சென்றுள்ளது.

இக்கிரவல் வீதிகளும் வடிகால் கட்டுமானங்களும் பல வருடங்களுக்கு முந்திய வாகன பாவனைக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டது. ஆனால் அப்போது வாகனப் பாவனையிலும் பார்க்க தற்சமயம் வாகனங்களின் தொகை பல மடங்கு அதிகரித்துள்ளது.

மேலும் A.9 பாதை திறப்பதற்கு முன்னர் C.D தர கிரவல் வீதிகளே சகல பாரவூர்திகள் செல்வதற்கும் தொடரணி மூலம் தெற்கிலிருந்து உணவுப் பண்டங்களைக் கொண்டுவருவதற்கும் பிரதான வீதிகளாக இருந்தன. இதை விட பொது மக்களின் அன்றாட போக்குவரத்துப் பாதைகளாகவும் இவ் வீதிகளே செயற்பட்டன. இதன் காரணத்தினால் இவ் வீதிகளும் வடிகால் கட்டுமானங்களும் 90வீதமானவை சேதமடைந்து காணப்படுகின்றன. சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பு இவ் வீதிகளைப் புனரமைப்பதற்கு எதுவித வெளிநாட்டு நிதிகளும் இது வரை கிடைக்கப்பெறவில்லை. வடக்கு கிழக்கு மாகாண சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட சிறு துளிநிதி மூலமே இவ் வீதிகள் ஓரளவுக்கேனும் போக்குவரத்திற்கு ஏதுவாக சீர்செய்யப்பட்டது. இக்கிரவல் வீதிகளை தார் வீதிகளாக அபிவிருத்தி செய்வதற்கு இது வரை போதுமான நிதி கிடைக்கப் பெறவில்லை. அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக பலவீதிகளில் போக்குவரத்து தடைப்பட்டு கிளிநொச்சி மாவட்டம் பல கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

வட்டக்கச்சி புளியம் பொக்கணை வீதியில் 2.கி.மீ நீளத்திற்கு இரண்டு அடி முதல் ஐந்து அடி வரை உயரமான வெள்ள நீர் வீதிக்கு மேலாகவும் வட்டக்கச்சி பாற்பண்ணை வீதியின் ஒரு கி.மீ நீளமான வீதியில் மூன்றடி உயரத்திற்கு வெள்ள நீர் வீதிக்கு மேலாகப் பாய்ந்துள்ளது. கிளிநொச்சி குளத்தில் உள்ள ஐந்து அடிவானில் நான்கடி உயரமான வெள்ள நீர் வீதிக்கு மேலாகப் பாய்ந்ததன் காரணமாக பெரிய குளம் கிராமம் நீருள் மூழ்கி மக்கள் இடம் பெயர்ந்து பொது இடங்களில தங்கியுள்ளார்கள்.



வீதியொன்றின் நிலை

முறிகண்டி-வன்னேரி வீதியில் அமைந்துள்ள தாம்போதிகளில் ஐந்து அடி வரை உயரமான வெள்ள நீர் மேலாகப் பாய்கின்றது. புதுமுறிப்பு-கோணாவில் வீதியில் ஒரு கி.மீ. நீளத்திற்கு வீதிக்கு மேலாக மூன்றாடி நீர் பாய்ந்து வீதி மேடையைஅரித்துச் சென்றுள்ளது. அக்கராயன் வலதுகரை வீதியின் பல இடங்களில் வலதுகரை வாய்க்கால் நீர் வீதிக்கு மேலாக 3 அடி பாய்ந்து வீதியை அரித்துச் சென்றுள்ளது. யூனியன் குளம் கலிங்கு தாம்போதி 50% திற்கு மேலாக பாதிப்புக்குள்ளாகி போக்கு வரத்துத் தடைப்பட்ட போதெல்லாம் பராமரிப்பு நிதி மூலம் போக்குவரத்திற்கு ஏதுவாக சீர்செய்யப்பட்டு வந்தது. தற்சமயம் பெய்த கடும் மழை காரணமாக இக்கட்டுமானம் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது. இதனைச் சீர் செய்வதற்கு எதுவித நிதியும் எமக்குக் கிடைக்கவில்லை.

வன்னேரிக்குளம் பண்டிவெட்டி பாலக் கட்டுமானத்தின்போது அமைக்கப்பட்ட உப பாதை மூன்று தடவைகள் அமைக்கப்பட்ட போதும் கடும் மழைகாரணமாக அடித்துச் செல்லப்பட்டுள்ளது. ஒரே நாளில் கைச்சாத்திடப்பட்ட மூன்று பாலங்களில் இரண்டு பாலங்கள்பூர்த்தியாக்கப்பட்டுசீரான போக்குவரத்திற்கு விடப்பட்டுள்ளது அவையாவன ஒன்று புதுமுறிப்பு-கோணாவில் பாலம், மாற்றையது ஸ்கந்தபுரம் கோணாவில் வீதிப் பாலம், மூன்றாவது பாலமான வன்னேரிக் குளம்-பண்டிவெட்டிப் பாலம் வெளியூர் ஒப்பந்தக்காரரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணத்தினாலும் அசமந்தப் போக்கினாலும் குறித்த காலத்திற்குள் நிறைவு செய்யப்படவில்லை.

பரமன்கிராய் கல்முனை வீதி கடந்த 40 ஆண்டுகளாக பராமரிக்கப்படவில்லை. இதனைச் சீர்செய்வதற்கு சிரான், நிகொட் போன்ற வெளி நிதி மூலங்கள் மூலம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் எதுவித ஒதுக்கீடும் செய்யப்படவில்லை.

மேற்படி காரணங்களினால் C, D தர வீதிகளைப் புனரமைக்கவோ அபிவிருத்தி செய்யவோ முடியாத நிலையில் உள்ளது.

உருத்திரபுரம் வீதிக்கு 3.0 கி.மீ. கிராஞ்சி வீதிக்கு 5.0 கி.மீ நிகொட் நிறுவனத்தின் மூலம் சிறிய அளவு நிதி ஒதுக்கப்பட்டு கேள்வி கோரப்பட்டுள்ளது. ஏனைய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு பெரிய அளவிலான நிதி ஒதுக்கீடு கிடைப்பதற்கு ஏற்ப அறிகுறிகள் காணப்படவில்லை இம் மாவட்ட மக்கள் தொடர்ந்தும் போக்குவரத்து இடையூறுகளுக்கு மத்தியில் பிரயாணம் செய்ய வேண்டிய நிலையே உள்ளது.

கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட வீதிகளையாவது தற்காலிகமாக சீர் செய்வதற்கு போதுமான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு நிதி நிறுவனங்கள் நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்திலேயே வீதிகளின் போக்கு வரத்துகளைச் சீர்ப்படுத்தலாம் என்று கூறினார். (சோ)

# ஏறாவூரில் வீடொன்றின் மீது இனந்தெரியாதோர் குண்டுவீச்சு

(மட்டக்களப்பு)

ஏறாவூரில் கடந்த வெள்ளிக்கிழமை வீடொன்றின் மீது இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இது தொடர்பாக வீட்டு உரிமையாளர் ரியாஸ் உம்மா ஏறாவூர் பொலிசில் புகார் செய்துள்ளார். இந்தச் சம்பவத்தின் போது வீட்டிற்குச் சேதங்கள் எதுவும் இல்லை .முஸ்லிம் அடிப்படைவாதிகளினால் இந்தக் குண்டு வீசப்பட்டிருக்கலாம் என ஏறாவூர் பொலிசார் சந்தேகம் தெரிவிக்கின்றார்கள்.

# குளோறோகுயின் மாத்திரைகளை உட்கொண்டு இளைஞன் மரணம்

(கண்டாவளை)

கண்டாவளை நான்காம் வாய்க்கால் பகுதியில் இளைஞன் ஒருவன் குளோறோகுயின் மாத்திரைகள் உட்கொண்டு மரணமானார்.

வல்லிபுரம் பரன் (வயது 22) என்ற இளைஞரே இவ்வாறு மரணமானவராவார் இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது 17.12.2004 மாலை நான்கு மணியளவில் தனது வீட்டில் வைத்து 25 குளோறோகுயின் மாத்திரைகளை உண்டுவிட்டு பின்னர் தருமபுரத்தில் உள்ள தனது சிறிய தாயார் வீட்டிற்கு சென்று தான் குளோறோகுயின் மாத்திரைகளை உட்கொண்டது குறித்து கூறினார். உடனே சிறியதாயார் இவரைத்தருமபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுஅங்கு சிகிச்சை வழங்கப்பட்டப்போதும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மேற்படி இளைஞர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக வட்டக்கச்சி காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (14)

# ஒளிவிழா

முழங்காவில் இரணைமாதா நகர் சொக்கலிங்கம் சிறுவர் பூங்கா சிறுவர்களின் 2004 ஒளிவிழா நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை பி.ப.4.00 மணியளவில் பூங்கா நிர்வாகி திருமதி விஸ்வநாதன் நிலாமதி தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வின் மங்கல விளக்கினை கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணனும், பூங்காவின் பணிப்பாளர் கந்தம்மானும் ஏற்றி வைத்தனர். அருட்சகோதரிகள் பிறில்டா, டோமினிக் ஆகியோர் தீபம் ஏற்றி வழிபாட்டை ஆரம்பித்து வைத்தனர். வரவேற்புரையை திருமதி அலோசியஸ்வாஸ் ஆசிரியை நிகழ்த்தினார்.நிகழ்வின் ஆசியுரையை அருட்சகோதரிகள் வழங்கினார்கள். சிறப்புரையை கந்தம்மானும், பூங்காக்களின் இணைப்பாளர் ஸ்ரீகுமாரும் வழங்கினர். இதில் சிறுவர்களின் கலைநிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

# பன்னவேலை பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கல்

முல்லைத்தீவு சிலாவத்தை கடற்கரைக் கிராமத்தில் பன்னவேலை பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் பயிற்சியை ஒழுங்குபடுத்திய செல்வி ச. சகீலா தலைமையில் ஆரம்பமானது.

புனர்வாழ்வு அமைச்சின் மனித வள அபிவிருத்திப் பிரிவின் நிதியுதவியின் கீழ் முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா-சுகுமாரின் ஒழுங்குபடுத்தலில் கச்சேரித் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளரினால் இப்பயிற்சிக்கான நிதி உதவி வழங்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை கடற்புலிகளின் அரச கட்டமைப்புத் தொடர்பாளர் சிலம்பரசன், சிலாவத்தை கிராம அலுவலர் எஸ்.சுமதி ஆகியோர் ஏற்றினார்கள்.

கண்காட்சி மண்டபத்தினை பிரதித் திட்டமிடல்பணிப்பாளர் சி.குணசிங்கம் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து வரவேற்புரையினை பயிற்சியினைப் பெற்றுக்கொண்ட மாணவி சுபாசினி வழங்கினார்.

கருத்துரைகளைக் கடற்புலிகளின் அரச கட்டமைப்புத் தொடர்பாளர், பனை அபிவிருத்திச்சபை பன்னவேலை ஆசிரியர் செல்வி உதயராணி , சிலாவத்தை கிராம அலுவலர், பன்னப்பயிற்சியினை வழங்கிய ஆசிரியர் செல்வி ர.சர்மிளா,கச்சேரிபிரதித்திட்டப்பணிப்பாளர் சி.குணசிங்கம் ஆகியோர் வழங்கினார்கள். தொடர்ந்து மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வருகை தந்திருந்த சிறப்பு, கௌரவ விருந்தினர்களால் வழங்கப்பட்டன. இறுதியாக நன்றியுரையினை மாணவி இராசேஸ்வரி வழங்கினார்.. (20)

# சூழல் பாதுகாப்பு பயிற்சிநெறி

சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான பயிற்சி அண்மையில் சிலாவத்தை தீர்த்தக்கரை பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.போரூட் நிறுவன வெளிக்கள இணைப்பாளர் க.குணாளன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் முல்லை மாவட்ட சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர் இ.கருணைவேல், மாவட்ட விவசாயத்திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் சி.சிவபாதம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் முல்லை மக்கள் நலன்புரிச்சங்கம் இதனை ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது. (20)

# கிளிநொச்சி-வட்டக்கச்சி பிரதான வீதியில் போக்கு வரத்து முற்றாகத் தடைப்படும் அபாயம்!

## -அவசர புனரமைப்புக்கு வலியுறுத்து

இரணைமடு குளத்தின் மேலதிக நீர் வெளியேறும் பகுதியை ஊடறுக்கும் கிளிநொச்சி-வட்டக்கச்சி பிரதான வீதியின் குறித்த பகுதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது. இதனை விரைவாகப் புனரமைக்காது போனால் போக்குவரத்து முற்றாகத் தடைப்படும் அபாயம் எதிர் நோக்கப்படுகிறது.

தற்போது பெருமழை பெய்து வரும் நிலையில் இரணைமடு குளத்திலிருந்து மேலதிக நீர் பெருமளவில் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்தப் பிரதான வீதியை ஊடறுத்து அவ்வப்போது நீர் பாய்ந்து வருகிறது. வீதிக்கு மேலாக பெருமளவு நீர் பாய்வதால் வீதியின் நிலை மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

குறித்த பகுதியில் இரு பக்கங்களிலும் வீதியைப் பாதுகாப்பதற்காகக முன்னர் அமைக்கப்பட்ட கொங்கிறீற் பாதுகாப்பு சுவர்கள் சில இடங்களில் உடைந்து போயிருந்தன. தற்போது பெய்யும் கனமழையால் நீர் வீதிக்கு மேலாக அவ்வப்போது பாய்வதால் குறைந்தது 5 மீற்றர் நீளமான கொங்கிறீற் சுவர் இடிந்து விழும்நிலையில் உள்ளது. இந்த கொங்கிறீற் பாதுகாப்புச் சுவர் அவசரமாக புனரமைக்கப்படாது போனால் வீதிப்போக்குவரத்து இனிவரும்மழை நாட்களில் தடைப்படும் அதேவேளை, வீதியின் குறித்த பகுதி முற்று முழுதாக நீரால் அள்ளப்படும் சூழல் எதிர்கொள்ளப்படுகிறது.

இந்த நிலைகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டியது மிகவும் அவசியமானதொன்றாகும்.

இதேவேளை குறித்த அரிக்கப்பட்ட பகுதியை மண் மூடைகள் கொண்டு வட்டக்கச்சி சந்தையடி மக்கள் ஒரு சிறிதளவு சீர்ப்படுத்தியுள்ளனர். இதனூடாக கனரக வாகனங்கள் பயணிப்பதால் கொங்கிறீற் பாதுகாப்புச் சுவர் மேலும் விரிசலுற்றுச் செல்வதும் சுட்டிக்காட்டத்தக்கது

# வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு உணவல்லா பொருள் வழங்கல்


(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப்பிரதேசத்தில் வெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு ஏ.எஸ்.பி நிறுவனத்தினரால் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் கிளி.கிழக்கு புனர்வாழ்வு கழகத்தினரால் உணவல்லாத பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

வட்டக்கச்சி ஜொனிபுரம், பன்னங்கண்டி, மாவடிவலயம் ஆகிய பகுதிகளில் வசித்த மக்கள் வெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்து இராமநாதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்கி இருந்தவர்களுக்கு வெள்ளிக்கிழமை உணவல்லாத பொருட்களான கூரைவிரிப்பு, வாளி, நுளம்பு வலை, பாய், பிளாஸ்ரிக் பொருட்கள் என்பனவும் வழங்கப்பட்டன மற்றும் இப்பகுதி மக்களினது பெரும்பாலான குடிசைகள் இடிந்த நிலையில் காணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (12)

# போர் உருவானால் எதிர்காலத்தில் இலங்கை என்றொரு நாடு இருக்காது

**-திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்**



(திருமலை)


**மீண்டுமொரு போர் உருவாகுமானால் இலங்கை என்றொரு நாடு எதிர்காலத்தில் கேள்விக்குறியாகவே இருக்கும். இதுபற்றி சிறிலங்கா அரசாங்கமே முடிவு எடுக்க வேண்டும். இவ்வாறு திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.**

திருகோணமலை மாவட்டத்தில் இயங்கும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் இணைக் கூட்டம் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு சமூக சேவைகள் நிலையத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கலந்து கொண்டார். இணையத்தின் உப தலைவர் திருமதி ர.பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சி.எழிலன் தொடர்ந்து உரையாற்று கையில், எங்களுடைய பணி மக்களுக்கு சேவை செய்வதே. நாங்கள் போராளிகளாக இருந்து கொண்டு மக்களுக்குச் சேவையாற்றுகின்றோம். நீங்களும் அது போன்று மக்களுக்காக மக்களோடு மக்களாக நின்று சேவையாற்ற வேண்டும். எமது மக்கள் கடந்த சில நாட்களாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கான நிவாரணங்கள் பெரிதாக இருக்க வேண்டும். ஆனால் சிறிலங்கா அரசாங்கம் ஒதுக்கீடுகளை மிக மிகக் குறைவாகவே ஒதுக்கியுள்ளது. வகுக்கப்படும் திட்டங்கள் யாவும் மக்களுக்குச் சரியான முறையில் செல்ல வேண்டும் என்பதே எமது விருப்பமும் நோக்கமுமாகும். மீண்டும் போர் ஆரம்பிக்கப்படும் என்ற அச்சம் இன்று எல்லா மக்கள் மத்தியிலும் உருவாகியிருக்கின்றது. போர் ஆரம்பிக்கப்படுவதனை நாம் விரும்பவில்லை. சரியான தீர்வு மக்களுக்குக் கிடைக்க வேண்டும். ஆனால் இந்த சமாதான காலம் ஏற்பட்டு கடந்த 3 வருடங்களாகியும் எமது மக்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. இன்றைய சமாதானச் சூழல் தொடர்ந்து இருக்க வேண்டும் என எல்லோரும் விரும்புகின்றார்கள். இந்த நிலைமைக்காகவா நாங்கள் போராடினோம்? எமது மக்களுக்கு சரியான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே நாங்கள் போராட்டத்தை ஆரம்பித்தோம். இதற்காகத்தானே 17,000இற்கும் அதிகமான போராளிகளை இழந்தோம். பல கோடிக் கணக்கான சொத்துக்கள், உடமைகளை இழந்தோம். இவை எல்லாம எமக்கொரு சரியான தீர்வு கிடைக்கும் என்பதற்காகவே இழந்தோம். அரசாங்கத்தினதும் படையினரினதும், பேரினவாதிகளினதும் மன நிலையில் எந்தவொரு மாற்றமும் இதுவரை ஏற்படவில்லை. பேச வேண்டிய பொறுப்பு சிறிலங்கா அரசிடமே இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

## நோயாளருக்கு உதவி

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் தென் இந்தியத் திருச்சபை முன்பள்ளியில் ஆஸ்த்துமா நோயினால் பாதிக்கப்பட்ட ஐம்பது நோயாளர்களுக்கு ஆஸ்த்துமா வியாதிக்கான பம்புகள் வழங்கப்பட்டன. இவற்றை சாவகச் சேரி லயன்ஸ் கழகம் மற்றும் சப்லா, வணிக்கா,அம்பிகா போன்ற நிறுவனங்கள் இணைந்து வழங்கியுள்ளன. (28)




**தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் வடமராட்சிப் பிரதேசமெங்கும் ஆங்காங்கே சுவரொட்டிகள் பல ஒட்டப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை மேலே காணலாம். (கா)**

## யாழ்.குடாநாட்டில் பிராந்திய வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு!

**-நோயாளர் அவலம் தீர்க்க நடவடிக்கை இல்லை**

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள பிராந்திய வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாக மாவட்ட வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.குடாநாட்டில் இயங்கிவரும் வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கிவரும் பிராந்திய மருந்தகங்கள் மற்றும் வைத்தியசாலைகள் என்பவற்றில் நிலவும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக நோயாளர்களுக்கு முழுமையான சிகிச்சையை திருப்திகரமாக வழங்க முடியாதுள்ளதாக தெரிவிக்கும் மாவட்ட வைத்தியசாலை அதிகாரிகள் ஆண்டு தோறும் நான்கு கட்டங்களாக வழங்கப்படும் மருந்துப்பொருள் விநியோகத்தின் இறுதிக் காலாண்டுக்கான மருந்துப் பொருள் தொகுதியை மாகாண சுகாதாரப் பணிமனை இன்னமும் வைத்திய சாலைகளுக்கு அனுப்பி வைக்காததனாலேயே இத்தட்டுப்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டியுள்ளனர். (33)

## யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திக்கு ஜப்பான் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையினை விஸ்தரிப்புச் செய்து நவீன வசதிகள் கொண்ட தொன்றாக புனரமைப்புச் செய்வதற்கு ஜப்பான் அரசு முன்வந்துள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு நவீன வசதிகள் ஏதும் அற்றநிலையில் இது காணப்படுவதனால் யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளும் பின்னடைவுகள்,பாதிப்புக்கள் என்பவற்றைக் கவனத்திற் கொண்டே இவ்வாறு யாழ் போதனாவைத்திய சாலையைப் புனரமைத்துக் கொடுக்க ஜப்பான் முன்வந்துள்ளது. (33)

## புன்னாலைக்கட்டுவன் வடக்கு பகுதியிலுள்ள பொதுமக்கள் படையினரால் அச்சுறுத்தல்

**வீடுகளிலுள்ளோர் விபரமும் திரட்டல்**

(யாழ்ப்பாணம்)

யாழ். புன்னாலைக் கட்டுவன் வடக்கு பகுதியில் உள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அண்மித்துக் குடியேறியுள்ள பொதுமக்களை படையினர் அச்சுறுத்துவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படிப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களது வீடுகளுக்குத் திடீர்திடீரென இரவு வேளைகளில் செல்லும் ஆயுதம் தாங்கிய படையினர் வீட்டில் தங்கியிருப்போரது விபரங்களைச் சேகரிப்பதுடன் வீடுகளுக்குள் புகுந்து தேடுதல்களையும் மேற்கொள்கின்றனர். இதனால் அப்பகுதி மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர். (33)

## சாவகச்சேரியில் மருத்துவ முகாம்

(தென்மராட்சி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையும், சாவகச்சேரி பிரிவும் இணைந்து மருத்துவ முகாம் ஒன்றை நேற்று முன்தினம் சாவகச்சேரி அமிர்தாம்பிகை மகாவித்தியாலயத்தில் நடத்தியது.

கண், காது, மூக்கு, தொண்டை நிபுணர் பெஞ்சமின் தலைமையில் காலை ஒன்பது மணி தொடக்கம் மாலை மூன்று மணிவரை நடந்த இந்த இலவச சிகிச்சை முகாமில் ஏராளமான மக்கள் பயனடைந்துள்ளனர். மற்றும் இவற்றுடன் பார்வை குறைவடைந்தோருக்கு இலவச மருத்துவசிகிச்சையுடன் மூக்குக் கண்ணாடியும் இலவசமாக வழங்கப்பட்டது. (28)



அண்மையில் பெய்த தொடர் கன மழையினால் மல்லாவி குளக்கரைப் பகுதியில் ஏற்கனவே இடம் பெயர்ந்து குடிசைகளில் வாழ்ந்து வந்துள்ள மக்களின் வாழ்விடங்களுக்குள் நீர் புகுந்துள்ளது. இதனால் இவர்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு மல்லாவி சிவன் கோயில் மண்டபத்தில் தங்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட 25 குடும்பத்திற்கு பாண்டியன்குளம் துணுக்காய் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உடன் சமைத்த உணவுகளை வழங்கி வருகிறது. (படம்-அன்ரனி)

## 5148 குடும்பங்கள் பாதிப்பு

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாகப் பெய்துவரும் கன மழை காரணமாகவும் அதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகள் காரணமாகவும் 5148 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட அரச செயலக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க மழை மற்றும் வெள்ளம் காரணமாக யாழ் மாவட்டத்தில் 1041 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன. இவற்றில் 263 வீடுகள் முற்றாக இடிந்து வீழ்ந்திருப்பதாகவும் 778 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்திருந்து பாவனைக்குதவாத நிலையிலிருப்பதாகவும் அப்புள்ளி விபரத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (33)

## விவசாயிகளுக்கு உதவி வழங்கல்

(மல்லாவி)

யோகபுரம் மத்திகிராம விவசாயிகளுக்கு வருமானத்தை ஊக்குவிக்கும் முகமாக போரூட், யூ.என். ஏச்சி.ஆர். நிதியுதவியுடன் பாண்டியன் குளம் துணுக்காய் அபிவிருத்திக் கழகம் சமூக பொருளாதாரக் குழுவின் அனுசரணையுடன் 3 பேர் கொண்ட விவசாயக்குழு பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்களான நீர் இறைக்கும் இயந்திரம், மண் வெட்டி, விதை உள்ளீடுகள், கிருமி நாசினி என்பனவற்றுடன் தையல் இயந்திரம், ஆடுவளர்ப்புக்கான பணம் என்பன வழங்கப்பட்ட நிகழ்வு யோகபுரம் மூவேந்தர் முன்பள்ளியில் அண்மையில் சமூகப் பொருளாதாரக் குழுத்தலைவர் த.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்றது



விவசாய உபகரணங்கள், உள்ளீடுகளை போரூட் நிறுவனத்தின் வெளிக்கள இணைப்பாளர் திருமதி முருகேசு -ஜமுனா தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கினார். (24)

# பதவியேற்று எட்டு மாதங்கள் கடந்த நிலையில் சமாதான முயற்சியில் அரசு சாதித்தது என்ன?

ரஞ்சித் ஆனந்த ஜயசிங்க
(லங்காதீப)
மொழியாக்கம் அ.சக்திவேல்

மூன்று வருடகாலமாக சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வந்துள்ள வேளையில் தற்பொழுது சமாதானப் பேச்சு வார்த்தை கடைசி அத்தியாயத்தை வந்தடைந்துள்ளது. மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் தாமதம் ஏற்பட்டால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடியப் போகின்றதென்று விடுதலைப் புலிகள் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அரசாங்கம் பதவி ஏற்று எட்டு மாதங்கள் கடந்தும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. சமாதானம் சம்பந்தமாக மக்களைக் கவரும் வண்ணம் மேடையில் அழகான வார்த்தைகளை அள்ளி வீசியும், ஐக்கிய தேசியக் கட்சி நாட்டைப் புலிகளுக்கு தாரைவார்த்து விட்டது. இடைக்கால நிர்வாகம் புலிகள் விரித்துள்ள வலை, குரங்குபாஞ்சானில் புலிகள் காவல் அரண்களை அமைக்கின்றனர், இது ஐக்கிய தேசியக் கட்சியின் பலவீனம். விடுதலைப்புலிகளுக்கு பிரயாணங்கள் மேற்கொள்வதற்கு அரசாங்கம் உலங்கு வானூர்தியை வழங்கி வருகிறது என்றும் மக்கள் முன்னிலையில் வீரமாகப் பேசி ஆட்சியைக் கைப்பற்றினார்கள். இந்த மேடைப் பேச்சுகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட ஜே.வி.பி.முன்னிலையில் இருந்தது இந்த மேடைப் பேச்சுக்களால் மக்கள் திசை திருப்பப்பட்டு இந்த அரசாங்கத்தைப் பதவியிலமர்த்தினர். அரசு பதவி ஏற்று எட்டு மாதங்கள் கடந்த நிலையில் சமாதானம் சம்பந்தமாக என்ன செய்துள்ளது? என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போம்


சனாதிபதி ஆரம்பகாலம் முதல் சமாதானப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்து செல்வதில் மிக ஆர்வம் காட்டினார். ஆனால் அரசுடன் இணைந்து செயற்படும் கட்சிகளின் நடவடிக்கைகளால் சனாதிபதி மிகவும் குழப்பம் அடைந்த நிலையில் உள்ளார். விடுதலைப்புலிகளுடன் இடைக்கால நிர்வாகப் பரவலாக்கல் சம்பந்தமாக அரசு பேச்சுவார்த்தைகளை நடத்தினால் அன்று அரசாங்கத்தின் சரித்திரம் முடிவடைந்து விடும் என்று ஜே.வி.பி.யினர் எச்சரிக்கை செய்துள்ளனர். இது சம்பந்தமாக ஜே.வி.பி. நாட்டுப்பற்றாளர் என்ற அமைப்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு சிறந்த பேச்சாளரான எல்லே குணவன்சதேரர் தலைமைதாங்கி வருகிறார். இவருடன் ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சவும் இணைந்து இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக நாடு பூராவும் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான புலிகளின் திட்டவரைவு தொடர்பான பேச்சு வார்த்தைகளில் நாம் கலந்து கொள்வோம் என மாவீரர் தின உரையில் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

இதற்கிடையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் சம்பந்தமாக சனாதிபதி விடுதலைப்புலிகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டார். விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக சமர்ப்பித்திருக்கும் வரைவில் ஆட்சேபனைக்குரிய விடயங்கள் இருப்பதாக கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளது. இதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக ஜப்பானிய விசேட பிரதிநிதி, யசூசிஅகாசி கொழும்பு வந்த அவரிடம் விசேட செய்தி ஒன்றை அனுப்பி இருந்தார். அச்செய்தியில் விடுதலைப்புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கத் தயார் என குறிப்பிட்டிருந்தார். இச்செய்தியை விடுதலைப் புலிகளின் அர்சியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மூலமாக விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு அறிவித்தார். இச்செய்தியைக் கேள்வியுற்ற ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க அக்கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச, நந்தன குணதிலக வெளிநாட்டு அமைச்சரின் இல்லத்திற்குச் சென்று இப்பிரச்சினை சம்பந்தமாக நீண்ட நேரம் கலந்துரையாடினார்கள். அப்பொழுது மங்களசமரவீரவும் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

அப்பொழுது இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குத் தாம் முழு எதிர்ப்பையும் தெரிவிப்பதாக ஜே.வி.பியினர் கூறினார்கள். நந்தன குணதிலக இது சம்பந்தமாக கடும் எதிர்ப்பையும் கதிர்காமருக்குத் தெரிவித்தார்.

பின்னர் எரிக்சூல்ஹெய்ம், பீற்றர்சன் ஆகிய இருவரும் இலங்கை வந்தனர். அவர்களிடத்தில் புலிகளுக்கு சனாதிபதி செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார். அந்தச் செய்தி அகாசியிடம் கொடுத்த செய்திக்கு மாறுபட்டதாக இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியுடனான பேச்சுக்களின் பிரகடனத்தை ஒஸ்லோ ஒப்பந்தமாக கருதி இறுதித் தீர்வுடன் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக கதைப்பதற்குத் தயாராகவுள்ளோம் என அதில் குறிப்பிட்டிருந்தார். அதாவது ஜே.வி.பி. யினர் வெளிநாட்டமைச்சர் கதிர்காமருடன் அவரது இல்லத்தில் சந்தித்துப்பேச்சு நடத்திய பின் சனாதிபதி இத்தீர்மானத்தை மேற்கொண்டார்.




பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட இருவரும் ஒஸ்லோ நகரில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் இறுதித் தீர்வாக சமஷ்டி முறைமை கூறப்பட்டிருந்தது. இதன் பிறகு ஜே.வி.பி யினர் அரசின் பிரதிநிதி எனக் குறிப்பிட்டு நோர்வே உயர்ஸ்தானிகர் ஹான்ஸ் பிரஸ்கருக்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பினர். அதில் நோர்வே நாட்டின் அரசியல் நடவடிக்கைகளைப் புறக்கணிப்பதாகவும், அவர்களில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக நோர்வே அரசு புலிகளுக்குச் சார்பாகவும், கடல் பிராந்தியத்தில் புலிகள் பயிற்சிகளை மேற்கொள்வதற்கும், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் பிரதிநிதிகளும் புலிகளுக்குப் பக்கச்சார்பாக நடந்துகொள்கிறார்கள் எனவும் அக்கடிதத்தில் நோர்வே உயர்ஸ்தானிகருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் குழப்பமடைந்த நோர்வே உயர்ஸ்தானிகர் சனாதிபதிக்கும், வெளிநாட்டமைச்சர் கதிர்காமருக்கும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்த தகவல் அரசாங்கத்தின் ஏற்பாட்டினால் எழுதப்பட்டிருந்ததா? என்று கேட்டபொழுது தமக்கும் அந்தத் தகவல்களுக்கும் தொடர்புகள் இல்லை என சனாதிபதி கூறிவிட்டார்.

மேலும் ஜே.வி.பி யினரும் சிங்கள தேசபிரேமி இயக்கமும் ஒன்றிணைந்து சமாதானப் பேச்சுகளுக்கு எதிராக சுவரொட்டிகளைத் தென்பகுதியில் ஒட்டிக்கொண்டு எதிர்ப்பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். சுதந்திரக் கட்சியில் அங்கம் வகித்துக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி இனவாதத்தை முன்னெடுத்துத் தனது கட்சியைப் பலப்படுத்தும் வரை அவர்கள் சந்திரிகா அம்மையாரோடு இணைந்து கொண்டே இருப்பார்கள். ஆகவே ஜே.வி.பி அரசாங்கம் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும். இதனால் நாடு மீண்டும் ஒரு யுத்த நிலைக்குத் தள்ளப்படும்வரை ஐக்கிய தேசியக்கட்சி பார்த்த வண்ணம் உள்ளது.

சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது இடைக்கால நிர்வாக அதிகாரப் பரவலாக்கல் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும். தற்பொழுது ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை சிறிலங்கா சுதந்திரக்கட்சி விலைகொடுத்து வாங்கி அமைச்சர் பதவிகளை வழங்குகின்றது. ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்கவை சிறைக்கு அனுப்பியது. இவைகளால் முன்பு சனாதிபதிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் இருந்த நெருக்கம் தற்பொழுது குறைந்துள்ளது. இதனால் அரசாங்கம் பெரும் குழப்பத்துக்குள்ளாகியுள்ளது.

அரசாங்கம் தற்பொழுது வெளிநாட்டு உயர்ஸ்தானிகர் காரியாலயங்கள் விடுத்துள்ள சமீப அறிக்கையினால் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளது. எது எப்படியிருந்தாலும் இனப் பிரச்சினைகள் சம்பந்தமாக நாட்டில் உள்ள இரண்டு பிரதான கட்சிகளும் தங்களுக்கு இடையில் ஏற்பட்டிருக்கும் கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்துக் கொள்வது மிக அவசியமாகும். அரசாங்கம் தமது பாராளுமன்ற உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துவதற்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆயுதமாகப் பயன்படுத்தக் கூடாது.

இதனால் இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தைகள் பெரும் சிக்கலான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இவற்றிற்கு இறுதித் தீர்வு காணும் பொருட்டு நோர்வே விசேட பிரதிநிதி எரிக்சூல்ஹெய்ம் தற்பொழுது இலங்கை வந்துள்ளார்.

இலங்கைக்கு வழங்கும் டோக்கியோ நிதி 45 ஆயிரம் கோடி நிதியுதவிகள் இந்த நாட்டுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக உதவிகள் வழங்கும் நாடுகளின் தலைவர்கள் சபை தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளுக்கு மீண்டும் உயிர் ஊட்டும் முயற்சியில் இறங்கியுள்ளது. 2005ஆம் ஆண்டு அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் ஓய்வு பெறப் போவதால், அதற்கு முன்னதாக சமாதான சபையின் தலைவர்களை வரவழைத்து இப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் விடயத்தில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டு வருகின்றார். இதன் வெற்றி தோல்வி சமாதான சபையில் தங்கியுள்ளது.

2005ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு ஒரு சவாலான ஆண்டாகக் கருதப்படுகின்றது. வரிகளினால் அரசு நிதியை வசூலிக்கவுள்ளமை இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் தெளிவாக்கியுள்ளது.

நாட்டின் வேறு அபிவிருத்திகளுக்கு வரியினால் வசூலிக்கப்படும் நிதி போதாது. ஆகவே அரசு வெளிநாட்டு நிதியுதவியை நிச்சயமாகப் பெற்றுக்கொள்வது மிக அவசியம். சமாதானத்தை நிலைநாட்ட வேண்டுமானால் அரசாங்கம் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளைநடத்த வேண்டும். இடைக்கால நிர்வாகம் சம்பந்தப்பட்ட பேச்சுக்களைத் தவிர வேறு எதிலும் புலிகள் கலந்து கொள்ளமாட்டார்கள். இதுவே புலிகளின் நிலைப்பா டாகும். இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் அரசாங்கத்தில் இருந்து ஜே.வி.பி யினர் பிரிந்துசென்று விடுவார்கள். ஆகவே சனாதிபதி இரு தலைக்கொள்ளி எறும்புக்குச் சமமாக உள்ளார். மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியினர் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள மாட்டோம் என அரசாங்கத்திடம் கூறியுள்ளார்கள். உதவி வழங்கும் நாடுகளின் கடைசி முயற்சியும் தோல்வி கண்டால் 2005ஆம் ஆண்டு இலங்கை ஒரு யுத்த ஆண்டாக மாறுவதைத் தடுக்க முடியாது.

## 9

* சீனாவில் ஷான்சி மாகாணத்தின் யாங்யுவான் நகரில் உள்ள நிலக் கரிச்சுரங்கத்தில் இடம்பெற்ற வெடி விபத்தில் 33பேர் பலி.



மீட்பு நடவடிக்கை

* ஈராக்கில் பொலிஸ் நிலையமொன்றில் ஏற்பட்ட தாக்குதலையடுத்து சந்தேகத்தின் பெயரில் 30 பேரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

* மியான்மார் தலைநகர் ரங்கூனில் உலக புத்தமதமாநாடு ஆரம்பமாகியது. 3நாட்கள் இம்மாநாடு இடம்பெற்றது. இம்மாநாட்டில் ஆயிரம் புத்ததுறவிகள் கலந்துகொண்டனர்.

* அமெரிக்க இராணுவ நலத்துறை அமைச்சர் அந்தோனி பிரின்சிபி தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

* நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான விவசாயக் கம்பனியில் குண்டு வெடித்ததில் அரச கட்டடம் பலத்த சேதமடைந்தது.

## 10

* அமெரிக்க - வியட்நாம் யுத்தம் முடிவடைந்து சுமார் 30ஆண்டுகளின் பின்னர் வியட்நாமுக்கான முதலாவது வர்த்தக விமானசேவையை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது.

* ஜெயேந்திரருக்குப் பிணை வழங்கப்படாத காரணத்தினால் விரக்தியடைந்த சென்னை தண்டையார் பேட்டையில் முத்துமாரியம்மன் கோவிலைக்கட்டி கும்பாபிசேகம் நடத்திய சிவயோகி சித்தானந்த சுவாமிகள் தூக்கிட்டுத் தற்கொலை.

* நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் உள்ள அரச அலுவலகம் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பினால் 4பேர் காயமடைந்தனர்.



குண்டு வெடிப்பில்.....

* அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் 2 குழந்தைகளையும் ஒருபெண்ணையும் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்த மர்மநபர் தானும் சுட்டுத் தற்கொலை செய்தார்.

* பாகிஷ்தான் நகரான குவெய்டாவில் உள்ள சந்தைப் பகுதியில் குண்டொன்று வெடித்ததில் 10பேர் பலி; 12பேர் காயமடைந்தனர்.



பசுமைப்புரட்சியாளர்

* கென்யாவில் பல கோடி மரங்கள் நட்டு, பசுமைப்புரட்சி செய்த "வங்காரி மாத்தாய்க்கு" ஒலோ நகரில் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

* பாகிஸ்தானின் பலோசிஸ்தான் மாகாணத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 10பேர் பலி; 30பேர் காயம்.

## 11



* பிரபல கர்நாடக இசைப்பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமி மரணம்.

* ஈராக்கிய உள்துறையமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளான குற்றவியல் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த கேர்ணல் ரஸாக் அப்துல் கரீன், கேர்ணல் அப்துல் கரீம் பார்ஹென் ஆகிய இருவரும் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை.

* வெனிசுவெலாவின் கரகாஸ் நகரின் மேற்குப் பகுதியில் சென்று கொண்டிருந்த விமானம் ஒன்று மலையில் மோதியதில் 16பேர் பலி.

* தாய்வான் நாட்டில் பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்றது.

* சூடானின் டார்பூர் பிராந்தியத்தில் சமாதானத்தை ஏற்படுத்தவென ஆபிரிக்க ஒன்றியம் நைஜீரிய தலைநகர் அபுஜாவில் பேச்சுக்களை ஆரம்பித்தது.

## 12

* நேபாளத்தில் முகூமாவட்டத்தில் மாக்ரி எனும் கிராமத்தில் வைத்து 6மாவோயிட்ஸ்டுத் தீவிரவாதிகளை அந்நாட்டு இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர்.

* பிலிப்பைன்சின் ஜெனரல் சான்டோஸ் நகர சந்தைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் 11பேர் உயிரிழந்தனர்; 30இற்கும் அதிகமானோர் காயம்.

* எகிப்தின் எல்லைப்பிரதேச மாரைபாவிலுள்ள இஸ்ரேலியச் சோதனைச் சாவடியில் பலஸ்தீன ஹமாஸ் அமைப்பு நடத்திய தாக்குதலில் 5இஸ்ரேலியப் படையினர் பலி.

* சீனாவின் தென்மேற்கு மாகாண மானகைசுவிலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 36பேர் சிக்குண்டனர்.

* ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதல்வர் மிர்காசிம் நெஞ்சுவலி காரணமாக மரணம்.

## 13

* சீனாவின் தென்மேற்கு மாகாணத்தில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தால் 36 பேர் பலி.

* ஈராக் தலைநகர் பாக்தாத்தின் கிரீன்சூன் என்ற அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள அரச கட்டட நுழைவாயிலில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 7 பேர் பலி, 17 பேர் காயம்.



தாக்குதலால் எழும் புகை...

* ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம்ஹுசைன் அமெரிக்கப்படையினரால் கைது செய்யப்பட்டு ஒருவருட பூர்த்தியான தினத்தில் நெருங்கிய சகாக்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

* ஜப்பானுக்கும், தென்கொரியாவிற்கும் இடையில் ஆயுதம் மற்றும் போதைவஸ்துக் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக இரு நாட்டு சுங்கப் பிரிவினருக்கும் பரஸ்பர உதவிகளை வழங்குவது மற்றும் புலமைச் சொத்துரிமையை மீறாது இருப்பது போன்ற உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளனர்.

### கடந்த வாரத்தில்

### 09.12.2004-15.12.2004

* கிழக்கு ஈரானிய எல்லைக்கருகில் இமாம்வியிஸ் பகுதிக்கருகில் மினிபஸ் ஒன்று காருடன் மோதி , விபத்துக் குள்ளானதில் 21 பேர் பலி.

* பாக்தாத் மேற்கில் உள்ள அன்பார் மாகாணத்தில் இடம் பெற்ற இரு தாக்குதல் சம்பவங்களில் 7 அமெரிக்க வீரர்கள் பலி.

* டோக்கியோவின் வடக்கிலுள்ள யூவா என்னுமிடத்தில் இரவு களஞ்சிய சாலையொன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 3 பேர் பலி.

## 14

* அணு மற்றும் ஆயுதத் திட்டங்கள் தொடர்பாக பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இருநாள் பேச்சுவார்த்தையை இந்தியாவும், பாகிஸ்தானும் ஆரம்பித்தன.




இருநாள் பேச்சுக்கள்

* இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் இரு ரயில் வண்டிகள் நேருக்கு நேர் மோதியதில் 25 பேர் உயிரிழந்தனர். 150 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

* தாய்வான் சனாதிபதி "சென்சுய்பியன்" தனது ஜனநாயக முற்போக்குக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தார்.

* ஈராக்கின் பாக்தாத்தில் அரசாங்க வளாகமொன்றில் கார்க்குண்டு வெடித்ததில் 12 பொதுமக்கள் பலி, 5 பேர் காயம்



கார்க்குண்டுவெடிப்பு

* உலகிலேயே மிக உயரமான பாலம் பிரான்சில் தெற்கு பகுதியில் தாண் நதி மீது மாசிப் மத்திய மலையில் மிலாப் நகரில் கட்டப்பட்டு இந்தப்பாலம் திறக்கப்பட்டது.

* சீன ஜனநாயக உரிமைகளுக்குக் குரல் கொடுத்த எழுத்தாளர் உட்பட இருவர் கைது.

* ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் 7 பேர் பலி, 13 பேர் காயம்

## 15

* சார்க் நாடுகளின் செய்தித்துறை அமைச்சர்களது இருநாள் மாநாடு இஸ்லாமாபாத்தில் ஆரம்பமானது.

* பங்களாதேஷில் 33 ஆவது சுதந்திர தினவிழாக் கொண்டாடப்பட்டது



சுதந்திர தினத்தில்...

* துருக்கியின் இஸ்தான்புல் நகரில் உள்ள கட்டடத் தொகுதியில் உள்ள திரையரங்கில் பெரும் தீ விபத்தில் புகையைச் சுவாசித்த 100 பேர் சுகவீனம்

# காணி நிர்வாகம் தொடர்பாக மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

வடகிழக்கு மாகாண காணி ஆணையாளரினால் காணி நிர்வாகம் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு கிளிநொச்சி நியாப் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று ஆரம்பமாகவுள்ள மேற்படி பயிற்சிக் கருத்தரங்கு 21,23ஆம் திகதிகள் வரை நடைபெறவுள்ளன. காணி மற்றும் வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டம் சம்பந்தமாக நடைபெறவுள்ள பயிற்சிக் கருத்தரங்கில் வடகிழக்கு மாகாணக் காணி ஆணையாளர் இ.ரவீந்திரன், மாகாண காணி மேலதிக செயலர் பரமலிங்கம், மாகாண உள்ளூராட்சி மேலதிகச் செயலர் பரமேஸ்வரன், உதவிக் காணி ஆணையாளர் குருநாதன், யாழ், கிளி, முல்லை மாவட்ட அரச அதிபர்கள் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கவுள்ளனர்.

மாவட்ட, பிரதேச செயலர்கள், காணி உத்தியோகத்தர்கள், குடியேற்ற உத்தியோகத்தர்கள், வெளிகளப் போதனாசிரியர்கள், எழுதுவினைஞர்கள் மேற்படி பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ)

# எம்.ஜி.ஆர்.நினைவு நிகழ்வு

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எம் தேச விடிவிற்காகவும் உலகில் உரிமைக்குரல் கொடுத்தவர்களில் முதன்மையானவரும், விடுதலை உணர்வோடு இறுதிவரை உறுதியாய் நின்றவருமான மறைந்த மக்கள் திலகம் பொன்மனச் செம்மல், தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் யாழ்,கிளிநொச்சிப் பகுதிகளில் நினைவு கூரப்படவுள்ளது.

எதிர்வரும் 24, 25, 26ஆம் திகதிகளில் வன்னிமாவட்ட எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் மேற்படி பகுதிகளில் நினைவு கூரல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மாதாந்தக் கூட்டங்கள் பிற்போடல்

முல்லை மாவட்ட அரச அதிபரின் மாதாந்தக் கலந்துரையாடல்கள் அனைத்தும் பிற்போடப்பட்டுள்ளதாக முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

எதிர்வரும் 20.12.2004, 21.12.2004 ஆகிய இரு நாட்களும் நடைபெறவிருந்த கலந்துரையாடல்கள் எதிர்வரும் 23.12.2004 நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு மாவட்ட விவசாயக் குழுக் கூட்டமும் 10.30 மணிக்கு அவசர புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தித் திட்டக் கலந்துரையாடலும், 11.30 மணிக்கு உலக உணவுத்திட்டக் கூட்டமும், மு.ப.12.30 மணிக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக் கூட்டம் பி.ப.1.30 மணிக்கு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பி.ப. 3.00 மணிக்கு அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம், பி.ப.4.00 மணிக்கு, சுற்றாடல் பாதுகாப்புக் குழுக் கூட்டம் பி.ப.5.00 மணிக்கு நியாப்திட்டக் கூட்டமும் நடைபெறவுள்ளதாகவும் இதனடிப்படையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றார். (20)




## நத்தார் பண்டிகையை முன்னிட்டு...

**18.12.2004-24.12.2004 வரை**

**ஒளிர் வன்னி ஆடை உற்பத்தி நிலையத்தில் உற்பத்தியாக்கப்பட்ட ஆடைகள்,**

*விசேட கழிவுடன்...*

## மாபெரும் மலிவுவிற்பனை

☞ மழைக்கோட்டுகள் உட்பட சிறுவர், சிறுமிகளுக்கான ஆடைகள், பெண்கள், ஆண்களுக்கான ஆடைகள் என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்,

☞ **ஒளிர் வன்னி ஆடைகள் விற்பனையகம்**
சந்தை உட்புறம்,
கிளிநொச்சி.

(சி.11040)



## எழுதுனர் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

பின்வரும் தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமும் எழுதுனர் பயிற்சி நெறிக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**

**01. கல்வித்தகைமை:-**

* க.பொ.த சாதாரணதரத்தில் தமிழ், கணித பாடங்கள் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

அல்லது.

* க.பொ.த.சாதாரணதரத்தில் தமிழ்,கணித பாடங்களில் சித்தியடைந்தவராகவும், க.பொ.த.உயர்தரத்தில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

**02. அகவை:-**

18 தொடக்கம் 25 வரை

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவு நாள்:- 31.12.2004
02. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் 12.01.2005அன்று காலை 09.00 மணிக்கு
03. நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:- போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு, நடுவப்பணியகம், கிளிநொச்சி. (கிளி/மகாவித்தியாலயம் அருகாமை)
04. நேர்முகத்தேர்வுக்கு வருகை தருபவர் தங்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பிற தகைமைச் சான்றிதழ், குடும்பப்பதிவு அட்டை என்பவற்றுடன் வருகைதருதல் வேண்டும்.
05. பயிற்சிக்காலத்தில் தங்குமிட வசதி வழங்கப்படுவதுடன் உதவு தொகையாக மாதம் ஒன்றுக்கு 4000 ரூபா வீதம் வழங்கப்படும்.
06. இப்பயிற்சிக்காலம் 06 மாதகாலத்திற்கு வழங்கப்படும்
07. பயிற்சி முடிவின் பின்னர் அவர்களின் தகைமைக்கேற்ப பணியமர்த்தப்படும்.

**விண்ணப்பப்படிவத்தின் மாதிரி:-**

01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :- பால் :-
02. பிறந்த/ஆண்டு/மாதம்/திகதி :-
03. தேசிய அடையாள அட்டை இல :-
04. விண்ணப்பதாரியின் முகவரி :-
05. க.பொ.த.சாதாரண தகைமைகள் :-
06. க.பொ.த.உயர்தர தகைமைகள் :-
07. பிற கல்வித் தகைமைகள் :-
08. குடும்ப விபரம் :-

**குறிப்பு:-** 01. நேர்முகத்தேர்வுக்கு கடிதம் கிடைத்தவர்களும் /கிடைக்கப்பெறாதவர்களும் நேர்முகத் தேர்வுக்கு குறித்த நாளில், குறித்த நேரத்தில், குறிக்கப்பட்ட இடத்திற்கு கல்விச் சான்றுகள் மற்றும் ஆவணங்களுடன் வருகை தருதல் வேண்டும்.

*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-*

மேலாளர்,
திட்டமிடல் பகுதி,
நடுவப்பணியகம்,
போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு,
கிளிநொச்சி.

(சி-10981)


# நாட்டின் அடுத்த சனாதிபதியை தீர்மானிப்பது அனுராவல்ல

## - நவின் திஸா நாயக்க தெரிவிப்பு

நாட்டின் அடுத்த சனாதிபதி யார் என்பதை தீர்மானிக்க வேண்டியது பொது மக்களாகும். எனவே அதனை அமைச்சர் அனுர பண்டாரநாயக்க தீர்மானிக்க முடியாது என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நவின் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று ஹற்றன் பகுதியில் இடம்பெற்ற காமினி திஸாநாயக்க நினைவு நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர்,

இந்த நாட்டின் அடுத்த சனாதிபதியைத் தீர்மானிப்பது நாட்டின் பொதுமக்களாகும். இந்த நிலையில் சந்திரிகா குமாரதுங்க பண்டார நாயக்கவே எதிர்வரும் 10 வருடங்களுக்கு நாட்டை ஆட்சி செய்வார் என அமைச்சர் அனுர பண்டாரநாயக்க கூறியிருப்பது பிழையான நிலைப்பாடாகும்.

யார் அடுத்து சனாதிபதி என்பதை அனுர பண்டாரநாயக்கவால் தீர்மானிக்க முடியாது.

இலங்கை நாட்டின் தேர்தல் முறையின்படி 6 வருடங்களுக்கு ஒரு முறை சனாதிபதி தேர்தல் நடைபெறவேண்டும். அதனை எவராலும் மறுதளிப்பது முடியாத காரியமாகும். அவ்வாறான நிலைப்பாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் இடமளிக்காது என அவர் மேலும் தெரிவித்தார். (32)

# வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு உதவ மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு

வடக்கு -கிழக்கு மாகாணம் மலையகம் என்ற நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் வகையில் மலையக மக்கள் முன்னணி முன்நகர்வுகளை மேற்கொண்டுள்ளதாக அதன் தலைவர் பி. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்

பாதிக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு உதவும் வகையில் மலையகத் தோட்டதொழிலாளர்களும், தோட்டங்களின் உத்தியோகத்தர்களும் தமது ஒரு நாள் சம்பளத்தின் அரைவாசிப்பங்கினை வழங்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதேவேளை உணவு, உடை, குழந்தை பால்மா மற்றும் தகரங்களில் அடைக்கப்பட்ட உணவுகளை இந்த மக்களுக்கு வழங்க விரும்பும் கொழும்பு வாழ் மக்கள் கொழும்பு டாம் வீதியின் 361 ஆம் இல்ககத்தில் அமைந்துள்ள மலையக மக்கள் முன்னணி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார் சேகரிக்கப்படும் பொருட்கள் நாளை செவ்வாய்க் கிழமை பாதிக்கப்பட்ட இடங்களுக்கு எடுத்துச்செல்லப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# திஸாநாயக்கவை விடுவிக்க பாராளுமன்றில் பிரேரணை

## - ஐ.தே.க. நடவடிக்கை

(கொழும்பு)

சிறையிலிருக்கும் எஸ்.பி.திஸாநாயக்கவை விடுதலை செய்யும் வகையில் ஐ.தே.கட்சி புதிய பிரேரணை ஒன்றைக் கொண்டு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்குப் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக் கொள்ளவும் அது தீவிரமாக முயற்சி செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும், எதிர்க்கட்சிகள் இணைந்து ஆதரவு தரும் பட்சத்தில் வரும் சனவரி மாதம் இந்தப் பிரேரணையை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு கட்சி முடிவு செய்துள்ளதாக செயலாளர் திஸ்ஸஅத்தநாயக்க பத்திரிகை ஒன்றிடம் தெரிவித்துள்ளார். அரசியல் கைதியான திஸாநாயக்கவை விடுவிக்க இரண்டு வழிகள் இருப்பதாகவும் முதலாவது வழி சனாதிபதி பொது மன்னிப்பையளித்தல் இரண்டாவது சபையில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருதல் என்பனவாகும்

மேற்படி பிரேரணையை கொண்டுவர திஸாநாயக்கவும் பூரண சம்மதம் தெரிவித்துள்ளதாவும் அறியவருகிறது.

# தொண்டர் ஆசிரியர்களுக்கு சனவரியில் நிரந்தர நியமனம்

## பிரதி நிதியமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

மூன்று வருடங்கள் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் எதிர்வரும் சனவரி மாதம் தொடக்கம் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என சிறிலங்கா பிரதி நிதியமைச்சர் அறிவித்துள்ளார்.

இவர்களைத் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுப்பதற்கு மாகாண மட்டத்தில் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கஸ்டப் பிரதேச பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென பிரதி நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

# எஸ்.பி. போகம்பரை சிறைக்கு மாற்றம்

தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதியாக இருக்கும் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்காவை கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கு மாற்றம் செய்யவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக சிறைச் சாலை திணைக்கள அதிகாரிகள் எத்தகைய கருத்துக்களையும் வெளியிட மறுத்துவிட்ட போதிலும், மேலிடத்தின் உத்தரவு காரணமாகவே இவர் கண்டி போகம்பரைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட விருப்பதாகத் தெரியவருகின்றது. இதேவேளை நேற்றுமுன்தினம் சிறீஜயவர்த்தனபுர வைத்தியசாலைக்குத் தனது கண்ணிற்குச் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புடன் திஸாநாயக்க அழைத்து செல்லப்பட்டு சிகிச்சையின் பின்பு மீண்டும் சிறையிலடைக்கப்பட்டார்.

# ஏவுகணைத் தொழிநுட்பம் குறித்து இந்தியாவுடன் அமெரிக்கா ஆலோசனை

ஏவுகணைப் பாதுகாப்புத்தொழில்நுட்பம் குறித்து இந்தியாவுடன் அமெரிக்கா ஆலோசனை நடத்தி வருவதாக அமெரிக்க ஆயுதக் கட்டுப்பாட்டுத்துறையின் உதவிச் செயலர் ஸ்டீபன் ரெட்மேக்கர் வெள்ளிக்கிழமை கூறினார்.

கண்டம் விட்டுக் கண்டம் சென்று தாக்கும் ஏவுகணைத் தாக்குதலை எதிர்கொள்வது தொடர்பான அமெரிக்க தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்து ஒத்துழைப்புத் தருமாறு இந்தியா உட்படப் பல்வேறு நாடுகளுக்கு அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதில் அமெரிக்காவுடன் ஒத்துழைக்கும் நாடுகள் ஜப்பான், பிரிட்டன்,டென்மார்க், அவுஸ்திரேலியா, கனடா, இஸ்ரேல், நெதர்லாந்து, ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா, துருக்கி, ஸ்பெயின்,போலந்து, செக்குடியரசு, ஹங்கேரி, உக்ரைன்,தாய்வான் மற்றும் இந்தியா.

இந்தியாவும் அமெரிக்காவும் கூட்டாக ஏவுகணைப் பாதுகாப்புப் பயிலரங்குளை நடத்தியுள்ளன என்று 'யுஎஸ் பாதுகாப்பு மற்றும் ஏவுகணைப் பாதுகாப்பு'குறித்து அமெரிக்கவெளியுறவுக் கொள்கை மாநாட்டில் பேசிய போது ரெட்மேக்கர் கூறினார்.

இது தொடர்பாக முன்னாள் பிரதமர் வாஜ்பாயுடன் அதிபர் ஜோர்ஜ் புஷ் பேசியுள்ளார் எனவும் ரெட்மேக்கர் குறிப்பிட்டார்.

# ஐ.நா.பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர் நிலை ஏற்கத் தயார் என இந்தியா அறிவிப்பு

ஐ.நா பாதுகாப்புச்சபையில் 'வீட்டோ' அதிகாரம் இல்லாமல் நிரந்தர உறுப்பு நாடாகப் பதவி பெற இந்தியா சம்மதம் தெரிவிக்க முடிவு செய்துள்ளது.

ஐ.நா பாகாப்புச் சபையில் தற்போது அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து,பிரான்ஸ், சீனா ஆகிய 5 நாடுகள்நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ளன. இந்த நாடுகளுக்கு 'வீட்டோ அதிகாரம்' எனப்படும் ரத்து அதிகாரமும் உள்ளன. இந்த 5 நாடுகள் தவிர சில நாடுகள் தற்காலிக உறுப்பினர்களாக உள்ளன. இந்தியா தற்போது நிரந்தர உறுப்பினராகவோ, தற்காலிக உறுப்பினராகவோ இல்லை.

ஐ.நா பாதுகாப்பு சபையை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் இந்தியா நிரந்தர உறுப்பு நாடாக முயற்சி செய்து வருகிறது. 'வீட்டோ' அதிகாரத்துடன் உறுப்பு நாடாக தீவிர முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

5 நிரந்தர உறுப்பு நாடுகளில் இங்கிலாந்து, ரஷ்யா,பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்திய பாதுகாப்புச் சபையில் இடம்பெற ஆதரவு தெரிவித்துள்ளன. ஜப்பான், ஜேர்மனி,பிரேசில் உட்பட மேலும் பல நாடுகளும் இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

சமீபத்தில் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட ரஷ்ய அதிபர் புட்டின் 'வீட்டோ' அதிகாரத்துடன் இந்திய பாதுகாப்புச் சபையில் இடம்பெற முழு ஆதரவு அளிக்கும் என்று கூறினார்.

இப்போது 'வீட்டோ' அதிகாரம் இல்லாமல் ஐ.நா பாதுகாப்புச் சபையில் உறுப்பு நாடாக இடம் பெற இந்தியா சம்மதம் தெரிவிக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

பாதுகாப்புச் சபையில் முதலில் உறுப்பினர் ஆவது, பிறகு படிப்படியாக முயற்சி செய்து 'வீட்டோ' அதிகாரத்தைப் பெறுவது என்றும் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆனால் பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பினர் பதவி கிடைத்தால் இந்தியா அதற்கு சம்மதிக்காது என்றும் அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.


## 05 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு-1976-04-04 வீரச்சாவு-1999-12-20

### கப்டன் சிறீகாந்தன்

பரமலிங்கம் விக்கினேஸ்வரன்
(விசேட வேவுப் படையணி)

வீரப்பிறப்பெடுத்து
விடுதலைக்காய் வித்தாகி
நிம்மதியாய் உறங்குகிறாய்
உன்நினைவு மனதில்
சுமந்தபடி எம்மால் உறங்க முடியவில்லை.

647\7
இராமநாதபுரம்,
கிளிநொச்சி. (5420)

தகவல்:
குடும்பத்தினர்





ஓம் ஸ்ரீராம ஜெயம்

## ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோயில்
## வட்டக்கச்சி,கிளிநொச்சி



## வைகுந்த ஏகாதசிப் பெருவிழா

நிகழும் தாரண வருடம் மார்கழி மாதம் 07 ஆம் நாள் 22.12.2004 புதன்கிழமை பகல் மூலமூர்த்திகளுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகளும், இரவு நான்கு சாமப் பூசைகளும் நடைபெறும்.

இரவு 10 மணிக்கு ஆனந்த சயன மூர்த்திக்கு வருடத்தில் ஒரு முறை நடைபெறும் சிறப்பு அபிஷேக ஆராதனைகளும், இரவு 12 மணிக்கு "வைகுந்த வாசலல்" திறக்கும் காண்டற்கரிய காட்சியும் இடம்பெற்று சிறப்புப் பூசைகளோடு

"மோட்ச அர்ச்சனையும்"

சிறப்பாக நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பகலும், இரவும் நாம பஜனை, சிறப்புச் சொற் பொழிவுகள், பகவத்கீதை முற்றோதல் என்பன நடைபெறவுள்ளன. அடியார்கள் அனைவரும் வருகைதந்து கண்ணன் திருவருள் பெறுவீர்களாகுக.

"பாரதா எப்போதெப்போது தர்மம் அழிந்து போய் அதர்மம் எழுச்சி பெறுமோ அப்போது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்கின்றேன்"
"நல்லோரைக்காக்கவும் தீயன செய்வோரை அழிக்கவும் அறத்தை நிலைநிறுத்தவும் நான் யுகம்தோறும் பிறக்கின்றேன்"
"கீதையில் கண்ணன்"

கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா!

இவ்வண்ணம்,
பரிபாலனசபையும்,
விழா உபயகாரர்களும்.

(5418)


# காஷ்மீர் பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவிடம் புதிய மாற்றம் தெரிகிறது

## பாகிஸ்தான் அமைச்சர் குர்ஷீத்

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பாகிஸ்தானும் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது என்று இந்தியா அங்கீகாரம் செய்துள்ளதைப் பார்க்கும்போது இந்தியாவின் காஷ்மீர் கொள்கையில் தெளிவானதொரு மாற்றம் தெரிகிறது என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷீத் முகம்மதுகசூரி கூறியுள்ளார்.

பாகிஸ்தான். வெளியுறவுத் துறை அமைச்சர் குர்ஷீத்முகம்மது கசூரி,ஜீயோ தொலைக்காட்சிக்கு ஒரு பேட்டி அளித்துள்ளார். அப்பேட்டியில்அவர் கூறியிருப்பதாவது;

இந்தியா, பாகிஸ்தான் அமைதிப் பேச்சில் காஷ்மீர் பிரச்சினையையும் சேர்த்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது. காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பாகிஸ்தானுக்கும் பங்கு உண்டு என்று இந்தியா அங்கீகாரம் கொடுத்ததன் மூலம் இந்தியாவின் காஷ்மீர் கொள்கையில் தெளிவானதொரு மாற்றம் தெரிகிறது என்று கசூரி கூறினார்.

கடந்த 57 ஆண்டுகளில் முதன் முறையாக காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானை இந்தியா அங்கீகாரம் செய்துள்ளது வரவேற்கத்தக்கது என்றும் அவர் கூறினார்.

காஷ்மீர் பிரச்சினை உட்படப் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் இரு நாட்டு அமைதிப்பேச்சில் விவாதிக்கப்படும் என்று கடந்த செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி நியூயோர்க்கில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும்,பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பும் கூட்டாக அறிக்கை விடுத்துள்ளனர். அதன் அடிப்படையில் தீவிரமான பேச்சுக்களும் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் கூறினார்.

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், காஷ்மீரில் நிரந்தர அமைதி ஏற்பட காஷ்மீர் பேச்சுவார்த்தையில் காஷ்மீர் மக்கள் இடம்பெற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## குஜராத்தில்இலேசான நில நடுக்கம்

புதுடில்லி,குஜராத் கட்ச் மாவட்டத்தில் உள்ள கடலோரப் பகுதியில் நேற்று முன்தினம்காலை மீண்டும் இலேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது 3.8 ஆக பதிவாகியிருந்தது. இதனால் எந்தச் சேதமும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. கடந்த ஒரு வாரத்தில் கட்ச் மாவட்டத்தில் இது இரண்டாவதுமுறையாக ஏற்பட்ட நில நடுக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிலவுக்கு விண்கலம் அனுப்பும் முயற்சியில் இந்தியா

## மாதவன் நாயர்


நிலவுக்கு விண்கலம் அனுப்பும் முயற்சிகளில் தீவிரமடைந்து இருப்பதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழக (ஸ்ரோ) தலைவர் மாதவன் நாயர் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது;


நிலவுக்கு விண்கலம் அனுப்பும் முயற்சிகளைப் பல்வேறு நாடுகள் மேற்கொண்டன. நிலவுக்கு விண்கலம் அனுப்பும் நடவடிக்கையை இந்தியாவும் மேற்கொண்டு வருகிறது. விஞ்ஞானிகள் வேகமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நிலவுக்கு மனிதனை அனுப்பும் முயற்சிகள் குறித்து உடனடியாக எந்தப் பதிலும் சொல்ல முடியாது. ஏற்கனவே ரோபோ மனிதனை அனுப்பும் முயற்சியும் நடந்து வருகின்றன. முன்னேறிய நாடுகளோடு நாம்போட்டி போட விரும்பவில்லை. விண்வெளியை தேசிய தேவைக்காகப் பயன்படுத்தவே நாம் விரும்புகிறோம்.

பொறியியல் படிப்பவர்களுக்கு வெளிநாடுகளில் நல்ல வேலை கிடைக்கிறது என்பது மாயையாகும். நமது நாட்டிலேயே முயற்சி மேற்கொண்டால் ஏகப்பட்ட வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

# மெக்ராத்தின் அபாரபந்து வீச்சு: பேர்த்தில் பாக். அணி படுதோல்வி






அவுஸ்திரேலிய அணிக்கும் பாகிஸ்தான் அணிக்குமிடையில் பேர்த்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று அவுஸ்திரேலியா வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத்தின் புயல்வேகப்பந்து வீச்சில் பாகிஸ்தான் 72 ஓட்டங்களுக்கு அதன் இரண்டாவது இன்னிங்சை இழந்ததுடன் 491 ஓட்டங்களால் படுதோல்வியையும் சந்தித்தது.

564 என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி ஆடிய பாகிஸ்தான் நேற்று முன்தினம் 3ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றுக்காலை தொடர்ந்து ஆடிய பாகிஸ்தான் வீரர்கள் மெக்ராத்தின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது திணறியதுடன் விரைவில் ஆட்டமிழந்தனர்.

பாகிஸ்தான் அணியில் யூசுப் யுகானா மட்டுமே அதிக பட்சமாக 27 ஓட்டங்களைப் பெற்றார். அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக், கம்ரான் அக்மால் ஆகியோர் ஓட்டம் எதனையும் பெறாது ஆட்டமிழந்தனர்.

பாகிஸ்தான் அணியின் இளம் வீரரும் பயிற்சிப் போட்டியில் சதமடித்தவருமான சல்மான் பட் இரு இன்னிங்சிலும் மொத்தமாக 26 ஓட்டங்களையே பெற்றார். அதே போன்று சகலதுறை வீரர்களான அப்துல்ரசாக், யூனிஸ்கான் ஆகியோரும் அவுஸ்திரேலிய பந்து வீச்சில் நிலைகுலைந்து விட்டனர். இரண்டாவது இனிங்சில் மெக்ராத் 16 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து எட்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் - 381 இரண்டாவது இன்னிங்ஸ் 5 விக்கெட் இழப்புக்கு 361.

பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸ் - 179

இரண்டாவது இன்னிங்ஸ் - 72


# மதுரை மாணவி அபார வெற்றி

அகில உலக 5ஆவது ஓபன சதுரங்க மதிப்பீடு போட்டிகளில் மதுரை டால்பின் பள்ளியைச் சேர்ந்த மாணவி வீராங்கனையாக தேர்வு பெற்றுள்ளார்.

5ஆவது அகில உலக சதுரங்க மதிப்பீடு போட்டிகள் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் நகரில் இம் மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை நடைபெற்றன. ஜெய்ப்பூர் மாநில சதுரங்க கழகத்தால் நடைபெற்ற இப் போட்டிகள் பாரத் பெட்ரோலியம் மற்றும் அலகாபாத் வங்கி உதவியுடன் நடைபெற்றது.

மொத்தம் 194 போட்டியாளர்கள் கலந்து கொண்ட இப் போட்டிகளில் நான்கு சர்வதேச மாஸ்டர்கள் மற்றும் ஒரு எப்.எம் (எப்ஐடிஏ) வீரர், வீராங்கனைகள், ஒரு சுவீடன் நாட்டு வீரர், 16 பெண் போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இந்தப் போட்டிகளில் மதுரை டால்பின் பள்ளியின் 9ஆம் வகுப்பு மாணவி ஆர்.பீரித்தி கலந்து கொண்டு 7 புள்ளிகள் பெற்று மிகச் சிறந்த வீராங்கனையாகத் தேர்வுசெய்யப்பட்டார்.

# இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் இனிங்ஸ் தோல்வியை நோக்கி பங்களாதேஷ்



பங்களாதேசுக்கு எதிராக சிட்டகொங்கில் நடைபெற்றுவரும் இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இனிங்ஸ் வெற்றி பெறுவதற்கு ஒரு விக்கெட்டை வீழ்த்த வேண்டிய நிலையில் உள்ளது.

காம்பீர், ராவிட், கங்குலி ஆகியோரின் சிறப்பான ஆட்ட துணையுடன் முதல் இனிங்சிற்காக பெற்ற 540 ஓட்டங்களுக்குப் பதிலளித்து ஆடும் பங்களாதேஷ் முதல் இனிங்சில் 333 ஓட்டங்களைப் பெற்று 7 ஓட்டங்களால் பலோஆன் ஆனாது. இதில் அஷ்ரபுல் 158 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இரண்டாவது இனிங்சை ஆடப் பணிக்கப்பட்ட பங்களாதேஷ் பதானின் சிறப்பான பந்து வீச்சில் நிலை குலைந்ததுடன் 9 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று தோல்வியின் விளிம்பில் உள்ளது. முதல் ஐந்து விக்கெட்டுக்களையும் பதான் கைப்பற்றினார். கும்ளே இரண்டு விக்கெட்டுக்களையும், ஹர் பஜன்சிங், சச்சின் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.




ஏற்கனவே, முதலாவது போட்டியில் இனிங்ஸ் வெற்றி பெற்றுள்ள இந்தியா இப்போட்டியிலும் வெற்றி பெற்றால் தொடரை 2-0 என்ற நிலையில் கைப்பற்றிவிடும்.

# இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி

## தென்னாபிரிக்கா 2 விக்கெட் இழப்பிற்கு 72 ஓட்டம்

தென்னாபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் பேர்த் எலிசபேத்தில் நடைபெற்றுவரும்



முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய மூன்றாம் நாளில் இரண்டாவது இனிங்சிற்காக துடுப்பாடும் தென்னாபிரிக்க அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 17ஓவர்கள் நிறைவில் 72 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பாடி முதல் இனிங்சில் 337 ஓட்டங்களைப் பெற்றது.


துடுப்பாட்டத்தில் டிப்பன்னர் 110, ருடெல்ப் 93 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் கொக்காட், பிளின்டொப் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்சை ஆடிய இங்கிலாந்து 425 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் அன்ருஸ் ரோாஸ் 126, பௌச்சர் 79, ரெஸ் கொதிக் 47 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் நிற்றினி மூன்று விக்கெட்டுக்களையும், பொலக் ஸ்ரியன், அன்ருகோல் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.



# ஊக்கமருந்து குற்றச் சாட்டிற்கு கிறீஸ் வீராங்கனை மறுப்பு

சில வாரங்களுக்கு முன்பு எதென்ஸ் ஒலிம்பிக்கில் ஊக்க மருந்து பாவித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட கிறிஸ் நாட்டு குறுந்தூர ஓட்ட இணை அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது.

கொஸ்டாஸ் கெனடறிஸ், கத்தரினா தனு ஆகிய இருவரும் டெல் அவீவ், சிக்காகோ, கிறிஸ் ஆகிய இடங்களில் நடைபெற்ற பரிசோதனையில் பங்கேற்காததை யிட்டு சந்தேகம் கொண்ட சர்வதேச மெய்வல்லுனர் சங்கம் இவர்கள் மீது ஊக்கமருந்து பாவனை செய்ததாகக்குற்றம் சுமத்தியிருந்தது..

# இந். அணியின் முன்னாள் கப்டன் விஜய ஹாசாரே மரணம்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் விஜய ஹாசாரே நேற்று மரணம் அடைந்தார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் விஜய சாமுவேல் ஹாசாரே. தலைமையில் தான் இந்திய அணி முதல் டெஸ்ட் வெற்றியைப் பெற்றது. 1951-52 ஆம் ஆண்டில் சென்னையில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் இந்த வெற்றி கிடைத்தது.

1946 ஆம் ஆண்டில் இங்கிலாந்திற்கு எதிரான டெஸ்டில் அறிமுகமான விஜயஹாசாரே 30 டெஸ்டில் விளையாடியுள்ளார். 14 டெஸ்டில் கப்டனாக இருந்துள்ளார். அவர் டெஸ்டில் 2,192 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 7 சதங்களும் அடங்கும். டான பிராட்மேன தலைமையிலான அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 2 சதம் அடித்துள்ளார். அதிகப் பட்சமாக 164 ஓட்டம் எடுத்தார். 20 விக்கெட்டுக்கள்ளையும் கைப்பற்றி இருக்கிறார். அவர் ஆடிய கடைசி டெஸ்ட் மேற்கிந்தியத்தீவுக்கு எதிரானதாகும். 1952-53ஆம் ஆண்டில் கிங்ஸ்டனில் இந்த ஆட்டம் நடந்தது.

1934ஆம் ஆண்டு முதல் 1967ஆம் ஆண்டு வரை உள்ளூர் முதல் தர ஆட்டத்தில் 238 போட்டிகளில் ஆடியுள்ள விஜய ஹாசாரே துடுப்பாட்டம் மட்டுமன்றி பந்து வீச்சிலும் சாதனை படைத்துள்ளார். முதல் தரப் போட்டியில் அனைவரையும் கவர்ந்த விஜய ஹாசாரே மொத்தம் 18,740 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 60 சதங்கள் அடங்கும். அதிக பட்சமாக ஒரே இன்னிங்சில் 316 ஓட்டங்கள் குவித்துள்ளார். அத்தோடு 595 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார். 1946-47 ரஞ்சி கோப்பை போட்டியில் குல் முகமதுடனான இணைப்பு ஆட்டத்துக்கு 577 ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்தவர்.

# முன்னாள் வீர, வீராங்கனைகளை கௌரவித்து வவுனியாவில் விளையாட்டுத்துறை வர்ன இரவு

வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மாகாண தேசிய ரீதியில் பதக்கங்களை வென்றெடுத்த விளையாட்டு வீர, வீராங்கனைகளையும் வவுனியா மாவட்டத்துக்கு பெருமை சேர்த்த முன்னாள் வீரர்களையும் கௌரவிக்கும் முகமாக விளையாட்டுத் துறை வர்ண இரவு (Sports Colors Night 2004) நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27.12.2004 திங்கட்கிழமை மாலை 6.50 மணிக்கு கச்சேரி முன்றலில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் தி.கணேஷ் கலந்து கொள்கின்றார். வடக்குக் கிழக்கு மாகாணத்தில் முதல் தடவையாக நடத்தப்படும் மேற்படி நிகழ்விற்கான ஒழுங்குகளை வவுனியா மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி சி.அண்ணாத்துரை .மேற்கொண்டுள்ளார்.

இந் நிகழ்வில் முன்னாள் வவுனியா மாவட்ட விளையாட்டு அதிகாரிகளும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

# சத்தியதர்ஷன் பூஜிதா ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் போட்டி

கனகபுரம் விளையாட்டுக்கழக அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் அமரர் சத்தியதர்ஷன் பூஜிதா (பூஜா) ஞாபகார்த்த மென்பந்து துடுப்பாட்ட வெற்றிக் கேடயத்துக்கான போட்டி நேற்று இரண்டாம் நாளும் மூன்று போட்டிகள் நடைபெற்றது.

கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வரும் இப் போட்டியில் முதல் போட்டியாக இளந்தாரகை அணிக்கும் N.E.C. 'பி' அணிக்கும் இடையில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இளந்தாரகை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 15 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 120 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களம் இறங்கிய N.E.C.'பி' அணியினர் 11 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 47 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

அடுத்து உழவர் ஒன்றியம் அணிக்கும், தூய தமிழ் அணிக்கும் இடையில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற உழவர் ஒன்றிய அணி 10.2 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 21 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. பதிலுக்கு ஆடிய தூய தமிழ் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

மூன்றாவதாக நடைபெற்ற போட்டியில்; N.E.C.'ஏ' அணிக்கும், இளம்தளிர் அணிக்கும் இடையில் நடைபெற்றது.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இளந்தளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 14.3 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்கு ஆடிய N.E.C'ஏ' அணி 13.3 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இப் போட்டிக்கு நடுவர்களாக சுபானந், குமார், தனபாலன் ஆகியோர் கடமையாற்றினர். இப் போட்டித் தொடரின் போட்டிகள் இன்றும் நடைபெறவுள்ளன.

(ச)



## சிந்தனைக்கு



இன்றைய உலக ஒழுங்கை பலம்தான் நிர்ணயிக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
-யாழ்.சாலை,கிளிநொச்சி. 20-12-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## புதிதாக ஒன்றுமில்லை!

நோர்வே பிரதிநிதிகளூடாக விடுதலைப்புலிகள் இயக்கம் அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள செய்தியை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை வெகுவிரைவில் ஆரம்பிப்பதென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் கூடிய சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை ஒன்றும் புதிய திருப்பமாகாது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேர்தல் காலத்தில் இருந்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என்றே கூறியிருந்தது. ஆனால் அது விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலதன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்துவது குறித்து முன்னுக்குப் பின் முரணாகப் பேசி வந்தமை சகலரும் அறிந்த தொன்று.

சிலவேளைகளில் இடைக்காலதன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது போன்று அறிவிப்புச் செய்வதும், ஒருசமயம் இறுதித் தீர்வுபற்றியே பேச்சுக்கள் நடத்தப்படும் எனக் கூறுவதும், சிலவேளைகளில் இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுடன் இறுதித் தீர்வு பற்றிப்பேசுவது எனவும், இன்னும் சிலவேளைகளில் அரசாங்கம் தயாரித்துள்ள தீர்வு யோசனைகள் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் கூறுவதுமுண்டு.

ஆகையினால் தற்பொழுது சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதெனத் தீர்மானித்திருப்பதென்பது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. இதே வேளை நோர்வே பிரதிநிதி ஊடாக விடுதலைப்புலிகள் அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள செய்தியின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் எனச் சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு நிறை வேற்றியுள்ள தீர்மானமானது அரசாங்கம் இன்றும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேசுவதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

அதாவது சுதந்திரக்கட்சியின் மத்திய குழுத் தீர்மானம் இடைக்காலதன்னாட்சி அதிகாரசபைத் திட்டம் பற்றிப் பேசுவதாகக் கூறுகின்றதா? அன்றி வேறு எதையாவது பற்றிக் கூறுகின்றதா? என உறுதிசெய்ய முடியாதுள்ளது. அதாவது அரசாங்கம் இன்னமும் இவ்விடயத்தில் நேர்மையுடன் செயற்படத் தயாராக இல்லை என்பதையே வெளிப்படுத்துவதாகவுள்ளது.

ஆகையினால் சுதந்திரக்கட்சி மத்திய குழுவில் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதினால் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிப்பதென அரசாங்கம் முடிவுக்கு வந்துவிட்டது என எவரும் முடிவு செய்துவிட முடியாது. இதனைத் தவிர மற்றுமொரு பாரிய நெருக்கடியும் உண்டு. அதாவது கூட்டணிக் கட்சிகளுடன் இணக்கப்பாட்டிற்கு வருதல் என்பது.

இது குறித்து சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் ''விரைவாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குத் தடையாகவுள்ள விடயங்கள் பற்றி ஜே.வி.பி உட்பட சகல ஆளும் கூட்டணிக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படும்" எனத் தெரிவிக்கின்றது. ஆனால் முன்னைய தீர்மானம் போன்றே இதுவும் புதியதொன்றல்ல.

சமாதானப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு ஜே.வி.பியை இணங்கச் செய்யலாம் எனச் சனாதிபதி சந்திரிகா பல தடவைகள் கூறியுள்ளார். ஆனால் அவரால் ஜே.வி.பியானது எந்த வகையிலும் அது தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதாக இல்லை. மாறாக மேலும் மேலும் அடிப்படை வாதிகளுடன் தொடர்புகளை வளர்த்துகள்கொள்வதிலேயே அக்கறையாகவுள்ளது. அத்தோடு சமாதான ஏற்பாட்டாளர்கள் மீதான அவதூறுப் பிரச்சாரத்தையும் நிறுத்துவதாகஇல்லை.

இதேவேளை பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்குத் தடையாகவுள்ள விடயங்கள் குறித்து ஜே.வி.பியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் எனச் சுதந்திரக்கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பினும் அது எந்தளவிற்குச் சாத்தியமாகும் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் தற்பொழுது இரு கட்சிகள் இடையேயும் முரண்பாடாகவுள்ள விடயங்கள் ஏற்கனவே பல தடவைகள் பேசப்பட்டுத் தீர்வுகாண முடியாதுபோன விவகாரங்களே ஆகும்.

இந்நிலையில் ஜே.வி.பியுடன் பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு காண்பதென்பது எவ்வாறு? அவ்வாறு இணக்கப்பாடு காணப்படாத நிலையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது எவ்வாறு? ஏனெனில் பேச்சுவார்த்தைகளுக்கு இடையூறாக இருப்பவை மாற்றம் காணாத நிலையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதென்பது எவ்வாறு? இநநிலையில் சுதந்திரக்கட்சி மத்திய குழுவின் தீர்மானத்தில் விளைந்துவிடப் போகும் நன்மைதான் என்ன?

# சிறைத்தண்டனை பெற்ற திகதியிலிருந்து பாராளுமன்ற அங்கத்துவம் பறி போகிறது

### -எஸ்.பி திஸாநாயக்க குறித்து சட்டமா அதிபர் அறிவிப்பு

உயர் நீதிமன்றத்தை அவமதித்ததன் காரணமாக தண்டனை பெற்ற திகதியிலிருந்து தற்பொழுது சிறை வாசம் அனுபவிக்கும் எஸ்.பி திஸநாயக்கவின் பாராளுமன்ற அங்கத்துவம் பறிபோய் உள்ளதென இலங்கை சட்டமா அதிபர் கமலசபேசன் அறிவித்துள்ளார். பாராளுமன்ற அங்கத்துவம் திஸாநாயக்கவிற்கு இருக்கின்றதா இல்லையா? என்ற விவாதம் சம்பந்தமாகவே இத் தீர்மானத்தை சபாநாயகருக்கு சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

இது இப்படி இருக்க பாராளுமன்றத்தில் சகல கட்சிகளின் கூட்டம் நடைபெற்றபொழுது சபாநாயகர் இச் சம்பவம் தொடர்பாக சட்ட ஆலோசனை நிபுணராகிய சனாதிபதி சட்டத்ததரணி எச்.எல் சில்வாவிடமிருந்து சட்ட ஆலோசனைகளைப பெறுவதற்குத் தீர்மானம் எடுத்துள்ளார்.

## எஸ்.பி திஸாநாயக்க உரையாற்றிய வயற்பரப்பில் தேங்காய் உடைத்து வழிபாடு

முன்னாள் அமைச்சரும் தற்போதைய ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி திஸாநாயக்கவை இரண்டு வருட சிறைத் தண்டனையிலிருந்து விடுவிக்குமாறு கோரி இறைவனை வழிபடும் வழிபாடுகளில் ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

திஸாநாயக்க நீதிமன்றத்துக்கு அவதூறு விளைவிக்கும் வகையில் உரையாற்றிய ஹபராதுவ பத்தேகொட வயற்பரப்பில் நேற்று முன்தினம் தேங்காய்களை உடைத்து அவர்கள் வழிபட்டுள்ளனர்.

# சங்கரராமன் கொலை வழக்கில் தேடப்பட்ட இரண்டாவது சந்தேக நபர் அப்பு கைதானார்

காஞ்சி சங்கர மடத்தின் முன்னாள் நிர்வாகி சங்கரராமன் கொலை வழக்கின் இரண்டாவது சந்தேக நபரான அப்பு எனப்படும் கிருஷ்ணசாமி நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் சித்தூர் பால கிருஷ்ணபுரத்தில் நேற்று கைது செய்யப்பட்டதாக முன்னர் வெளியான தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும் பின்னர் கிடைத்த ஒரு தகவல் இவர் தானாக வந்து சரணடைந்ததாகக் கூறுகிறது.

இதேவேளை இவரது கைது சங்கரராமன் கொலை வழக்கில் முக்கியமான ஒரு முன்னேற்றமாக அமையும் எனத் தமிழக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

### பாகிஸ்தான்-சிறில. அதிகாரிகள்

# சுதந்திர வர்த்தக உடன் படிக்கை குறித்து மூன்று நாட்கள் கூடி ஆராய்வர்

பாகிஸ்தான்- சிறிலங்கா அதிகாரிகள் இம் மாதம் 22ஆம் திகதியிலிருந்து மூன்று நாட்கள் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இரண்டு நாடுகளுக்குமிடையில் அமுல் செய்யப்படவுள்ள உத்தேச சுதந்திர வர்த்தக உடன் படிக்கையின் கீழ் இரு நாடுகளும் வர்த்தகம் செய்யவுள்ள பொருட்களின் பட்டியல்கள் குறித்து இவ் அதிகாரிகள் இதன் போது இறுதி முடிவு எடுக்கவுள்ளனர்.

### இலங்கைக்குழு கலந்து கொள்ளத்தடை

கோலாலம்பூரில் நடக்க இருக்கும் ஆசிய பாராளுமன்ற வைத்திய அதிகாரிகள் சம்மேளனக் கூட்டத்திற்கு இலங்கை வைத்திய சங்கம் கலந்து கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது. இந்த சம்மேளனத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் சகலரும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பவர்கள் இலங்கைக் குழுவில் வைத்தியர்கள் இல்லாதபடியால் இக் கூட்டத்தில் இவர்கள் கலந்து கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளதென ஆசிய பாராளுமன்ற வைத்தியசங்கம் தெரிவித்துள்ளது.

## இனந்தெரியாத காய்ச்சலுக்கு நேற்றும் ஒருவர் பலி

தென்மாகாணத்தில் பரவி வருகின்ற நிமோனியாவிற்கு சமமான ஒரு வகை இனம் தெரியாத நோயினால் நேற்றும் ஒருவர் உயிரிழந்துள்ளர்.

ரக்வானை கல்பாய என்ற இடத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் மூன்று நாட்களாக ஒரு வகை காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2005 யூன் மாதத்திற்கு முன்

## சர்வதேச நிதி நிறுவனங்கள்— இலங்கைக்கு நிதி வழங்கமாட்டா

சர்வதேச நிதி நிறுவனமும், உலக வங்கியும் 2005ஆம் ஆண்டு யூன் மாதத்திற்கு முன்னதாக இலங்கைக்கு நிதி வழங்கப் போவதில்லை என உலக வங்கி அறிவித்துள்ளது. தற்போதைய அரசு சில நிறுவனங்களுக்கு அபிவிருத்தி சம்பந்தமாக திட்டங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை என்றும் இத் திட்டங்கள் பூர்த்தியாவதற்கு பல மாதங்கள் தேவைப்படுகிறதென அரசு அறிவித்துள்ளமையால் உலக வங்கி இலங்கைக்கு நிதி வழங்கப் போவதில்லை என அறிவித்துள்ளது.

# பொய் வாக்குறுதியின் அடிப்படையிலேயே அரசாங்கம் தமது நகர்வை மேற்கொள்கிறது

### -ஐ.தே.க.பா.உ பந்துல குணவர்த்தன

அரசாங்கம் கடந்த காலத்திலும் நடை முறையிலும் பொய் வாக்குறுதிகளை அடிப்படையாக கொண்டே தமது நகர்வை மேற்கொண்டு வருகிறது என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்

ஐக்கிய தேசிய கட்சி, அரசாங்கம் அமைத்திருந்த காலத்தில் கட்டுப்பாட்டில் வைத்திருந்த 0.1 என்ற வாழ்க்கைச் செலவுப் புள்ளியை இந்த அரசாங்கம் தாம் பதவிக்கு வந்த ஒரு வருடத்துக்குள் 15.2 என்ற நிலைக்கு உயர்த்தியுள்ளது. அதேநேரம் ஒற்றை இலக்கத்தில் இருந்த பண வீக்கம் இன்று இரட்டை எண்களையும் கடந்துள்ளது.

நாட்டின் கடன் வட்டி வீதம் 7 வீதமாக தமது ஆட்சியில் இருந்த போதும் தற்சமயம் 10.5 வீதமாக உயர்ந்துள்ளது. நாட்டின் ரூபாவின் பெறுமதி பாரிய வீழ்ச்சி அடைநதுள்ளது என அவர் மேலும் கூறினார்.

## டக்ளசின் வீட்டினருகே நடமாடிய இரு இளைஞர்கள் கைது

சிறிலங்காவின் இந்து சமய விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பம்பலப்பிட்டி வாசஸ்தலம் அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் 2 தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் மாலை பொலிசாரால் கைது செய்யப்பட்டார்கள். இந்த இளைஞர்கள் அவரது நடமாட்டத்தை உளவு பார்க்கும் நோக்கத்துடன் நடமாடியிருக்கலாம் எனக் கருதும் பம்பலப்பிட்டி பொலிசார் விசாரணைக்காக தடுத்து வைத்துள்ளார்கள்.

# சிறிலங்கா - இந்திய கடற்படைப் பயிற்சி

## ஈழத்தமிழருக்கு எதிரான சதி முயற்சி

### -திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையினர்

சிறிலங்கா - இந்திய கடற்படையினரின் கூட்டுப்பயிற்சி தமிழீழ விடுதலைப் போரட்டத்திற்கும் ஈழத் தமிழ் மக்களுக்கும் சமாதானத்திற்கும் எதிரான மிகப் பெரிய சதி முயற்சியாகும். இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக சிறிலங்கா கடற்படையினரும் இந்தியக் கடற்படையினரும் கூட்டாக பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந் நடவடிக்கை தமிழ் மக்களுக்கும் தமிழ் மக்களினது விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரானதொரு செயற்பாடாகும். இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்பரப்புக்குள் பலாத்தகாரமாக நுழையும் போது அதனை தடுத்து நிறுத்தாமல் இருப்பதும் உள்ளே விட்டு விட்டு கண்டும் காணாதது போல் இருந்துவிட்டு தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மீனவர்களையும் தமிழீழத்திலுள்ள தமிழ் மீனவர்களையும் மோதவைக்கின்ற செயற்பாட்டில் இந்த இரண்டு கடற்படையினரும் செயற்படுவதனை நாங்கள் அறிவோம். தமிழ் மக்களினது விடுதலைப் போராட்டத்திற்கு உறுதுணையாக இருந்த இந்திய அரசு இன்று தமிழீழ மக்களுக்கெதிராகவே செயற்படுகின்றது என்பதனை நாம் மிகவும் வேதனையுடன் நோக்குகின்றோம். தமிழீழ மண்ணில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்ட போதும், குண்டுகள் வீசப்பட்ட போதும் தமிழ் மக்களின் வள்ளங்கள், மீன்பிடிப்படகுகள், சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்ட போதும் மூச்சுக்கூட விடாத இந்திய அரசாங்கம் இன்று சிறிலங்கா கடற்படையினருடன் கூட்டுச் சேர்ந்து கூத்தடிப்பதனை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்திய அரசாங்கம் ஈழத் தமிழ் மக்களினது உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய தார்மீகப் பொறுப்பு மிக்கதாகும். இந்திய அரசாங்கம் தமிழ் மக்களுக்கும் அவர்களது விடுதலைப் போராட்டத்திற்கும் உதவி செய்யாது விட்டாலும் இடைஞ்சல் செய்ய வேண்டாமென கேட்டுக்கொள்கின்றோம். கேணல் கிட்டு உட்பட பன்னிரண்டு போராளிகள் இந்திய கடற்படையினரின் வஞ்சக வலை விரிப்பினாலேயே குமுறும் கடற்பரப்பில் தீயாகிச் சங்கமித்தனர். இதனை இன்றும் நாம் நினைத்துப் பார்க்கின்றோம். இந்திய அரசாங்கத்திற்கு தமிழ் மக்கள்தான் உண்மையான நண்பர்களாக இருப்பார்களே தவிர சிறிலங்கா தேசம் அல்ல என்பதை இந்திய அரசாங்கம் உணர்ந்து செயற்படுமென வேண்டுவதுடன், காலஞ் சென்ற முன்னாள் இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி தமிழீழ மக்கள் மீது வைத்திருந்த பற்றையும் பாசத்தையும் நினைவில் நிறுத்தி சிறிலங்கா அரசாங்கத்திற்கு இராணுவ ரீதியாக உதவுகின்ற அத்தனை செயற்பாடுகளையும் உடன் நிறுத்த வேண்டுமென வேண்டுகின்றோம். இந்திய அரசு இவ்வாறான கடற்படை கூட்டுப் பயிற்சி மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையே உள்ள இராணுவ சமநிலையை சீர்குலைத்து சமாதான ஒப்பந்தத்தை நிச்சயமாக சிதறடிக்குமென எச்சரிக்கின்றோம். இப்பழியை இந்திய அரசாங்கம் சுமக்கக் கூடாதென் தமிழீழ மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம் என

### -வவு.திருநாவற்குளத்தில்

## 600 குடும்பங்கள் குடியிருக்கும் காணி எவருக்கும் தெரியாமல் விற்பனை

வவுனியா திருநாவற்குளத்தில் 600 குடும்பங்கள் குடியிருக்கும் காணி முழுவதும் காணியில் இருப்பவர்களுக்குத் தெரியாமல் வேறு நபர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுவிட்டதாக வவுனியா மாவட்ட நீதிமன்றத்திற்கு செய்யப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிசார் ஆரம்பித்துள்ளனர். காணியை விற்பனை செய்தவர், காணியை வாங்கியவர், காணி விற்பனை செய்தமைக்கான காணி உறுதியை எழுதிய சட்டத்தரணி, காணி மாற்றம் செய்த காணிப் பதிவு உத்தியோகத்தர் உட்பட சம்பந்தப்பட்டவர்களை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அந்த உத்தரவில் பணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் காணியை விற்பனை செய்தவரையும், காணி வாங்கிய வரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் இந்தகாணி தொடர்பான வழக்கு நிலுவையில் இருக்கின்ற சமயத்தில் காணியில் உள்ள 600 குடும்பங்களுக்குத் தெரியாமல் நடைபெற்றுள்ள காணி விற்பனை தொடர்பான காணி உறுதியை எழுதிய சட்டத்தரணி நீதிமன்றத்தின் தடை உத்தரவை மீறிச் செயற்பட்டமையினால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றியும் இந்தச் செயற்பாட்டின் மூலம் அவர் சட்டத்தரணிகளுக்கான ஒழுக்கக் கோவையை மீறியுள்ளார் என்பதற்கான சான்றுகள் இருக்கின்றனவா என்பது பற்றியும் ஆய்வு செய்து நீதிமன்றத்திற்குத் தெரிவிக்குமாறும் நீதிபதி எம்.இளஞ்செழியன் வவுனியா பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். (21)

### சட்டம்...

குறித்து சிலர் என்மீது குற்றம் சாட்டினர் நான் அதனை வைபவத்தில் கூறவில்லை பேச்சு வார்த்தை ஒன்றின் போதே கூறினேன். நான் அவற்றை மீண்டும் ஒரு முறை இங்கு கூறமாட்டேன் ஆனால் முன்பு கூறியதையே இங்கு மேலும உறுதி செய்கிறேன். அனைவரும் அல்ல, எனினும் இந்த நாட்டின் சட்டத்தையும்,அமைதியையும் பாது காக்க வேண்டும் அதனை விடவும முக்கியமானது மனிதாபிமானம் இதனையும் பாதுகாக்க வேண்டும். மனிதாபிமானதைப் பாதுகாப்பதில் அரசாங்க முக்கியஸ்தர்கள் நீதிமன்றம், சட்டத்தையும், அமைதியையும் பாதுகாக்கவுள்ள பொலிசார் இராணுவம் ஆகியோரே இதில் அங்கம் வகிக்கின்றனர். அந்த மூன்று நிறுவனங்களும் கடமைகளைச் செய்யாது இருக்கின்றனர். நான் அனைவரையும் குறிப்பிடவில்லை. பலவருடங்களாகக் கட்டி எழுப்பப்பட்ட சட்டங்களையும், சம்பிரதாயங்களும் மீறத் தொடங்கும் போது அந்த நிறுவனங்கள் வீழ்ச்சியடையும். நாடு வீழ்ச்சியடையும் இறுதியில் மனிதன் வாழும் நாடா அல்லாமல் கால் நடைகள் வாழும் நாடாக மாறக்கூடும். சில இடங்களில் தற்போதும் அவ்வாறு நடந்து கொள்கிறது என்றார் அவர்.

### உள்...

பேண முடியாதவர்களாக உள்ள எமது படைகள் வெளிநாட்டில் அமைதியை நிலைநாட்டும் பணிக்குப் போகத்தான் வேண்டுமா? சர்வதேச சமூகத்தின் மத்தியில் சிறிலங்கா தொடர்பான ஒரு கவர்ச்சியை ஏற்படுத்துவதற்காக மட்டுமே இது உதவுகிறது. ஆகவே இனிமேல் அமைதிப் படையினராக வெளிநாடுகளுக்கு இராணுவத்தை அனுப்பப்போவதில்லை. என்று சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்ரினனட்; ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார். தமக்குப் போதிய படையினர் இல்லை என்பது இராணுவத்தின் களமுனைத் தளபதிகளிடமிருந்து கிடைக்கும் தொடர்ச்சியான முறைப்பாடு ஆகும். ஆகவே இனியும் பிந்தாமல் உள்நாட்டில் பாதுகாப்பு அளவீடுகளைக் கருத்திற் கொண்டு இராணுவம் முற்தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். எனகொழும்பில் பாதுகாப்பு ஆய்வாளர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### பிற்போடல்

சுகததாஸ விளையாட்டரங்கில் இன்று நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபை பிரதிநிதிகளின் மாநாடு பிற்போடப்பட்டுள்ளது.

தற்போது நிலவுகின்ற பாதகமான காலநிலையை முன்னிட்டு பிற்போடப் பட்டுள்ளதாக உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

### மேல்...

திர்வுக்கான வாய்ப்புகள் இல்லை. அதாவது இலங்கையின் புவியோடுகளின் தன்மையானது புவியதிர்வு ஏற்படுவதற்கான தன்மையை கொண்டிருக்கவில்லை. எனவே புவிஅதிர்வு தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை இந்த நிலையில் மேல் மாகாணத்தில் ஏற்பட்ட அதிர்வானது இலங்கையை அண்டியுள்ள கடல்பகுதியில் ஏற்பட்ட புவியதிர்வின் ஒரு கட்ட தாக்கமாக இருக்கவே வாய்ப்புகள் உள்ளன எனத் தெரிவித்தார். (32)

### மக்களின்...

துள்ளது. மக்களின் விடுதலை அவர்களின் வாழ்க்கையின் முன்னேற்றத்தில் தான் தங்கியுள்ளது. சண்டையில் வெற்றியீட்டுவதால் மாத்திரம் மக்களின் வாழ்க்கையில் விடுதலை கிடைத்துவிடாது என்றார். இதில் திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன் கருத்துத் தெரிவிக்கும் போது,

எப்போது அடுத்த யுத்தம்? அந்த நாள் எப்போது வரும்? என்று பரவலாகக் காத்திருக்கும் நேரத்தில் நாம் அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடலை நடத்துகிறோம். பேராட்டத்தின் உச்சகட்டம் மக்களின் நல்வாழ்வுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். போர் நடந்தாலும் சரி, சமாதானகாலமாக இருந்தாலும் சரி மக்களுடைய தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். மக்களுடைய தேவைகள் மற்றும் அபிவிருத்திகளைப் பூர்த்தி செய்யக் கூடிய கட்டமைப்பு இல்லாதபடியால் நாம் பேச்சுவார்த்தைகளிலிருந்து ஒதுங்கிக் கொண்டோம். என்றும் எழிலன் சொன்னார். காலையில் ஆரம்பித்த கலந்துரையாடல் மாலை வரை நீடித்தது. (25)

# வெள்ளத்தில் மிதக்கும் மிதிவெடிகள் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்ட சில பகுதிகளில் ஏற்கனவே புதைக்கப்பட்டிருந்த மிதி வெடிகளினால் ஆபத்து தோன்றியிருப்பதால் மக்களை விழிப்பாக இருக்குமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாலையடி வெட்டை, களுவன்கேணி, கட்டுமுறிவு, சவுக்கடி மற்றும் வாகரை உட்பட மாவட்டத்தில் ஏற்கனவே மிதிவெடி புதைக்கப்பட்டுள்ள இடங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள கிராமங்களிலும், அருகிலுள்ள பகுதிகளிலும் இந்த அபாயம் இருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிவித்துள்ளது. 150 முதல் 200 கிராம் எடையுடைய பிளாஸ்ரிக்கினால் தயாரிக்கப்பட்ட மிதிவெடிகள் வெள்ளத்தில் மிதப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இது வரை 8 மிதிவெடிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதனால் முறக்கொட்டாஞ்சேனை பகுதியில் ஓரிரு கால் நடைகள் தாக்கப்பட்டுள்ளன என்றும் அறிவித்துள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகம், வெள்ளத்தில் மிதக்கும் சந்தேகத்திற்கிடமான பொருட்களை எடுக்க வேண்டாம் என்றும் மக்களைக் கேட்டுள்ளது.

# வெள்ளை நிற தூள் குறித்து நோர்வே தனியாக பரிசோதனை

நோர்வே தூதரகத்திற்கு வந்ததாக கூறப்படும் அந்ராக்ஸ் சந்தேக தூள் சம்பந்தமாக தாம் புறம்பாக இரசாயன பரிசோதனையில் ஈடுபட்டுள்ளதாக நோர்வே தூதரகம் தெரிவித்துள்ளது

கடந்த வியாழக்கிழமையன்று இடம்பெற்ற இந்த சம்பவத்தின் பின்னர் நோர்வே தூதரகம் மூடப்பட்டது

பெரும்பாலும் இந்த தூதரகம் எதிர்வரும் புதன்கிழமையன்று திறகப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது இந்த நிலையில் இலங்கை இரசாயன பகுப்பாய்வு திணைக்களமும் இந்த தூள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. (32)

# காத்தான்குடியில் வீட்டின் மீது நேற்று அதிகாலை குண்டுவீச்சு

காத்தான்குடியின் 5ஆம் குறிச்சியில் நேற்று அதிகாலை குண்டு வீச்சு சம்பவம் இடம்பெற்றுள்ளது . தமிழ் முஸ்லிம் உறவுகளுக்கான பிரஜைகள் குழுவின் தலைவரான சீனிமுகமது இஸ்மாயில் என்பவரின் வீட்டின் மீதே இந்தக் குண்டு வீச்சு நடத்தப்பட்டுள்ளது எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை இந்த சம்பவம் இடம்பெற்ற போது பிரதேசத்தில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்தது இவருக்கு கடந்த ஒரு வருட காலமாக பொலிசாரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த போதும் தற்போது அது விலக்கப்பட்டுள்ளது இந்த நிலையிலேயே இந்தக் குண்டு வீச்சு சம்பவம் இடம்பெற்றுள்ளது. (32)

### ஜே.வி.பியை...

இரண்டு வாரங்களே உள்ளன. அது மகிழ்ச்சியானதாக இருக்காது. இவ்வாறு சிறிலங்கா விமானப் படையின் முன்னாள் தளபதி ஹரி குணதிலக்க தெரிவித்ததாக ஏ.எப்.பி செய்தி நிறுவன செய்தியொன்று தெரிவிக்கின்றது.

### சனாதிபதி...

படைத்தளபதியாக இருந்த மாரம்பேயின் நிர்வாக காலத்தில் பலாலியினில் அன்னையர் முன்னணிப் பிதிநிதிகளுடன் நடாத்திய செய்மதி தொலைபேசி உரையாடலின் போதும் இதை தாங்கள் மீளவலியுறுத்தியிருந்தீர்கள். ஆனால் தங்களால் உறுதியளிக்கப்பட்டது போன்றுளந்தவொரு தீர்வும் எமக்கு கிட்டியிருக்கவில்லை.

இதேவேளை முன்னைய ஐக்கிய தேசிய ஆட்சிக் காலத்தினில் காணாமல் போன எமது பிள்ளைகளது நிலையினை அறிந்து தருமாறு பேச்சுக்களை நடாத்திய போது,இக்காணாமல் போதல் தங்களது பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலப் பகுதியிலேயே இடம்பெற்றதாக கூறி அவர்கள் தட்டிக்கழித்து விட்டனர். இந்நிலையில் மீண்டும் தாங்கள் சார்ந்த அணி ஆட்சிபீடமேறியுள்ள நிலையில் தங்களால் ஏற்கனவே வழங்கப்பட்ட உறுதிமொழியின் பிரகாரம் எங்கள் பிள்ளைகளது நிலையினை அறியத் தாருங்கள் இவ்விடயம் தொடர்பாக உரையாட நேரம் ஒன்றையும் ஒதுக்கித் தாருங்கள்" என்று மேற்படி மகஜரில் கேட்கப்பட்டுள்ளது. (27)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
கதிரேசு
சோமசுந்தரம்

[திருநகர் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர்]

18.12.2004 காலமாகிய செய்தியைக் கேட்டு அதிர்ச்-சியுறுவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

திருநகர் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்

(சி-10985)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது